# திராவிடநாடு



# அவரும் நாமும்

"கன்னட நாட்டில் வெளியாகும் ஒரே ஆங்கிலநாளிதழ் "Deccan Herald." நேற்று அதன் தலையங்கத்தைக்காண நேரிட்டது. கழக கருத்துகளுக்கு எவ்வளவு தூரம் வலிவையூட்டுகிறது என்று வியந்ததுமட்டுமல்ல கண்களில் கண்ணீரையும் கொணரவைத்தது அத் தலையங்கம். இத்துடன் 'கத்தரித்து' அனுப்பியுள்ளேன்," என்று பெங்களூரைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் எனும் கழகத்தோழர் ஒருவர் ஆர்வத்துடன் திட்டியுள்ளார், எமக்கு! அவர் கடிதம் காணுமுன்பே, நாம், அத் தலையங்கத்தைக் கண்டோம்—நமக்கு எந்த எண்ணம் ஏற்பட்டதோ அதுவே, தோழருக்கும் உண்டாகியிருக்கிறது- கழகத்தின் கொள்கை ஒற்றுமைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு!!

தலையங்கம், கண்ணீரைக் கொணரவைத்தது, என்கிறார் தோழர்! 'இதுவோ, எம் தலைவிதி,' என்று ஏங்கி நிற்கும் இலங்கை வாழ் தமிழருக்கு, அந்தச் சம்பவம் எப்படியிருந்திருக்கும்?

ஆடம்பரத்தோடு இலங்கைத் தீவுக்குச் சென்ற ஆசியாவின் ஜோதி நேருபண்டிதரை, இலங்கை வாழ் தமிழர்கள் அழைத்து, அன்பும் பண்பும் கலகக வரவேற்பளித்தனராம். எவ்வளவு ஆர்வமும், நம்பிக்கையும் அவர்தம் அகத்திலும் முகத்திலும் இருந்ததோ!

வரவேற்பைப் பெற்றுக் கொண்ட நேரு அவர்கள், "முதலில் இந்தியில் பேச முயன்றார். ஆனால் கூட்டத்திலிருந்தவர்களிடையே, உற்சாகம் காணப்பட முடியாமையால் ஆங்கிலேயத்திலேயே," பேசியிருக்கிறார். என்ன பேசினார் தெரியுமா?

"இலங்கை வாழ் தமிழர்காள்! நீவிர் இங்கே எட்டு லட்சம் பேர், இருக்கும் உரிமையும் அற்று அடையும் அல்லல்களை அறிவேன். அதனைத் தீர்த்துவைப்பதில் எனக்கு மட்டும் சிரத்தையிராதோ? நீவிர் யார்! பாரதத் தாயின் பைந்தமிழ் மைந்தர்கள் என்றோ!! கருமமே கண்ணாயினோர், மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், செவ்வி அருமையும் காணார், கண் துஞ்சார். அயரேல், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமற் போகேன்!!"

இவ்விதம், ஒரு ஆறுதல்மொழி கிடைக்குமென்றே, எதிர்பார்த்திருப்பர்—இலங்கை வாழ் தமிழர்கள்! ஏனெனில், அவர்கள், இப்போது எந்த நாட்டு 'பிரஜைகள்' என்றே தெரியவில்லை — எந்த உரிமையும் இல்லையென்று கூறுகிறது இலங்கை அரசு. அது சம்பந்தமாக, அங்கே குமுறிக் கொண்டிருக்கும் எரிமலையினை நமது ஏட்டில் அடிக்கடி எடுத்துக் காட்டி வருகிறோம். "சுதந்திரன்," "வீரகேசரி" போன்ற ஏடுகளில் வரும், எழுத்துக்கள் நம்மை, எங்கோ இழுத்துச் செல்லுகின்றன. அந்தளவுக்கு வேதனையும் சோதனையும்அனுபவிக்கின்றனர், நமது சகோதரர்கள்.

இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காணும் பொறுப்பு டில்லி வசமேயிருப்பதால், ஆச்சாரியார் காலத்தில் சென்னை சட்டசபை தீர்மானமே செய்து அனுப்பிற்று, அடிக்கடி டில்லி பார்லிமெண்டிலும் குரல் எழாமலில்லை.

எனவே, ஏதாவது ஓரிரு வார்த்தைகளாவது, இலங்கைப் பிரதமருடன, பண்டித நேரு பேசுவார், பரிகாரம் காணமுயல்வார், என்றே வரவேற்பு வழங்கிய தமிழ் மக்கள் எதிர்பார்த்திருப்பர்.

ஆனால், நேரு அவர்கள் வழங்கியதென்ன? வாய்சசொல் கூட அல்ல! வழக்கம்போல் போதனையும், விளக்கமும்!!

நட்புறவுடனே நீங்கள் நடக்க வேண்டும்—என்று நலியும் தமிழர்களுக்குப் போதித்துவிட்டு, அவர் தம் ஆசைகளில் மண்ணையள்ளிப் போடுவதுபோல,

"**இந்தியா—இலங்கைச் சிக்கல்களைப் பற்றிப் பேச்சு நடத்துவதற்காக நான் இங்கு வரவில்லை. இப்பொழுது அதற்கு நேரமில்லை,**" என்று கையை விரித்துவிட்டுக் கிளம்பியிருக்கிறார்!!

அனுராதபுரத்தில், புத்தரின் திருசசிலை முன் மெய்மறக்க நின்றாராம் நேரு—தனி ரயிலில் பிரதமர் பண்டாரநாயகாவுடன் பேசிக் கொண்டே சென்றாராம்—செய்திகள் வருகின்றன, பிரமாதமாக. ஆனால் அவருக்கு, உயிர்போகத் துடிக்கும் தமிழர்களைப் பற்றிப் பேச நேரம் இல்லையாம்! அதற்காக அவர் அங்கே போகவும் இல்லையாம்!!

நேருவின் இந்த வார்த்தைகளைக்கேட்ட இங்குள்ள 'தினமணி' யார் பூசி மெழுகுகிறார். ஆனால், கன்னடத்தில் உலவும், 'டெக்கான் ஹெரால்டு' எழுதுகிறது:

"...இலங்கையிலிருக்கும் பத்து லட்சம் இந்தியரில் கிட்டத்தட்ட எட்டு லட்சம் பேர், தங்கள் எதிர்காலம் எப்படியாகுமோ என்கிற சஞ்சலமும் சந்தேகமும் கொண்டு கிடக்கிறார்கள். அவர்களது எதிர்காலம்குறித்து இரண்டு ஒப்பந்தங்கள், இலங்கைககும் இந்தியாவுக்குமிடையே நடந்தன! ஆனால், சேனநாயகாக்களைத் தொடர்ந்து வந்த சர்க்காரும் இப்பொழுதுள்ள பண்டாரநாயகா ஆட்சியும், ஆதரவற்று நிற்கும் ஆயிரக்கணக்கான பிரஜைகள் இலங்கையின் வாழ்வில் இரண்டறக் கலந்தவர்கள் என்கிற சரித்திர உண்மையை உணர மறுத்துவருவதால், இந்த ஒப்பந்தங்கள் சரிவர நிறைவேற்றப்படவில்லை. பிரஜா உரிமை கோரி அனுப்பப்படும விண்ணப்பங்களை எப்படி இலங்கை அரசு உதாசீனம் செய்கிறது என்பது குறித்து பல ஊழல்கள் வெளிவந்தன. இலங்கை சுப்ரீம் கோர்ட்டும், நியாயமான மனுக்கள் கூட நிராகரிக்கப்படுவதாகச் சொல்லி அது சமபந்தப்பட்ட அதிகாரிகளைக் கண்டித்திருக்கிறது. இரண்டு சதவிகித மனுக்களே அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

# நமது வணக்கம்

15] ஆண்டு சந்தா ரூ. 8 [26—5—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 45

ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் தலைவர் விக்கி விக்கி அழ, அமைச்சர்களாகவும் அந்தஸ்து மிக்கவர்களாகவும் உலவுவோர் அனைவரும் 'எமது குரு! எமது தலைவர்!!' என்று போற்ற, ஆந்திர மாநிலத்திலுள்ள மக்கள் அனைவரும் கண்கலங்கி நிற்க, ஆந்திர கேசரி பிரகாசம் அவர்கள், தமது தள்ளாத வயதில், இயற்கையால் எடுத்துச் செல்லப்பட்டு விட்டார்.

காங்கிரஸ் இயக்கத்தில் வயதால் மட்டுமல்ல தியாகத்தாலும் முதிர்ந்த பெரியார் அவர். விடுதலைப்போரின் வரலாற்றில், முக்கிய இடம்பெற்று விட்டவர், பிரகாசம் அவர்கள். இலண்டனுக்குச் சென்று, பாரிஸ்டர் பட்டம் பெற்றுவந்து, பிரசித்தி பெற்ற வக்கீல் எனப் பேரெடுத்து, அதுவழங்கும் காசிலும் வாழ்க்கைச் சுகத்திலும் இலயித்துக்கிடக்க வேண்டிய வயதில் அவை யாவையும் துச்சமெனக் கருதி, சுதந்திரப் போரில் குதித்த நாள்முதல், உயிர் போகும்வரை அவருடைய வாழ்வு போராட்டமாகவேயிருந்தது. சுதந்திரப் போராட்டம் முடிந்து, ஆங்காங்கு காங்கிரஸ் அரசுகள் நிறுவப்பட்டு, அவர் முதல் மந்திரியாகயிருந்தபோதும் சரி, அக்கட்சியை விட்டு எதிர் நாற்காலியில் அமர்ந்தபோதும் சரி, அவர் வாழ்க்கை போராட்டமயமாகவேயிருந்தது. இதயத்தில் நேர்மை என்று பட்டதற்காக விடாமற் போராடும் அவருடைய தீரமே, பணியாத பண்டித நேருவையும் பணியச்செய்து, புதியதோர் ஆந்திர அரசு பூக்கச்செய்தது! ஆந்திரத்தின் பிதா ஆவார், பிரகாசம் அவர்கள்!!

அவர் இழந்த செல்வத்துக்கும், செய்திருக்கிற தியாகத்துக்கும், வாழ்க்கையின் கடைசி நாட்கள் எவ்வளவோ நிம்மதியாகக் கழிந்திருக்கவேண்டும். ஆனால், வடநாட்டவரின் கூடாரம் ஆகிவிட்ட காங்கிரஸ் மேலிடத்தால், அவருக்கு அந்த வாய்ப்பு இல்லாமற்போய்விட்டது. பிரசாத்துக்குப் பதில், இம்முறையாவது, இவரைக் குடியரசுத் தலைவராக்கி ஒரு கவுரவம் செய்திருக்கலாம்! செய்யவில்லை, டில்லி!!

செய்யாதது மட்டுமல்ல, ஆச்சாரியா கிருபளானி எதிர்க்கட்சியிலிருந்தும் கூட, அவர் முன்பு காங்கிரசில் ஒரு புள்ளியாய் இருந்தார் என்பதற்காக தனது அபேட்சகரை நிறுத்தாது, விட்டுக்கொடுத்தது, காங்கிரஸ். ஆனால் மறைந்த பெரியார் பிரகாசம், இதற்கு முன்பு நடந்த தேர்தலில், சென்னை துறைமுகம் தொகுதியில் நின்றபோது — ஐயகோ —கிருபளானிக்குக் காட்டப்பட்ட கண்ணியம் காட்டப்படாமல் தோற்கடிக்கவும்பட்டார், காங்கிரஸ் ஆதிக்கபுரியினரால்.

உண்மை உழைப்பாளர்களுக்கு உயர்வளித்து மகிழ வேண்டுமென்ற நல்ல பண்பு, நம் நாட்டு அரசியல் துறையில் இன்னும் ஏற்படவில்லை. எனவே மறைந்த மாவீரர் பிரகாசம் அவர்களை டில்லி உரிய இடத்தில் வைக்காததில் ஆச்சரியமொன்றுமில்லை. எதிர்காலமாவது இந்த ஒப்பற்ற நல்ல பண்பை நம் நாட்டு அரசியல் தலைவர்களுக்கு உண்டாக்கட்டும்.

பிரகாசம் அவர்களின் மறைவு கேட்டதும், நமக்கு 'அவர்' உருவம்மட்டுமல்ல அவர் போன்றோர், வளர்த்த காங்கிரசும் கண்முன் தெரிகிறது. அந்தளவுக்கு கலந்து இருந்தவர். ஆந்திர கேசரி!—என்றால், சாமான்யமா? அஞ்சாநெஞ்சர்! ஆர்வக் குன்று! அயராத தேசபக்தர்!!

நல்ல கல்வியும், சிறந்த வாழ்வுமிருந்தும் அதைத் தேசத்துக்காக அர்ப்பணித்த சிலர், அவர். அதனால்தான், அவரது உருவம், ஆந்திரத்திலுள்ள ஒவ்வொரு இல்லத்திலும், ஒவ்வொருவர் இதயத்திலும் இடம் பெற்றுவிட்டது. அத்தகைய ஒரு உத்தமரை, சாவுகொண்டுபோய்விட்டது! ஆனால் அவரது திருநாமமும் சேவையும், 'ஆந்திரம்' உள்ள மட்டும் இருக்கும்!!

இறந்த பெரியாரின் தியாகத்துக்கு, அன்பும் மரியாதையும் கலந்த நமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தச் சூழ்நிலையில் பண்டித நேரு இலங்கைக்கு விஜயம் செய்கிருர்; யாத்திரை செல்கிருர். தவிக்கும் இலங்கை வாழ் இந்தியருக்கு அவர் வழங்கும் முதல் புத்திமதியே, ஏமாற்றமாக யிருக்கிறது. தாய்நாட்டைவிட்டு எவ்வளவு தூரத்திலிருந்தாலும் இங்கிருந்து போனஒவ்வொருத்தரையும் இந்தியாவின் நீண்டகரங்கள் அணைத்து ஆதரவளிக்கும் என்று சுயராஜ்யப் போராட்ட காலத்தில் முழக்கமிட்ட பண்டித நேருவா, இப்படிச் சொல்கிருர் எனபது சிலருக்கு வியப்பை உண்டாக்கலாம். ஏனையோருக்கு, நமது வெளிநாட்டு மந்திரி சபை ஏன் இப்படி நடக்கிறது இதுபோன்ற விஷயங்களில், என்கிற குழப்பம் ஏற்படக் கூடும். அன்டார்டிக் என்ன ஆகுமோ என்கிற பரபரப்பிலும், கொரியாச் சண்டை, இந்தோசீனப் போர், அல்ஜீரியக் கிளர்ச்சி முதலியவைகளில் மட்டுமல்ல ஐரோப்பாவின் சிக்கல்களைக்கூடத் தீர்த்துவைக்கப் புறப்படுவோருக்கு, அருகிலுள்ள மனிதாபிமானம் நிரம்பிய பிரச்னையில் ஏன் இவ்வளவு அசிரத்தை. தொல்லைகளைத் தீர்த்துவைக்கும் கிருஷ்ணமேனனுக்கு நேரம் கிடைக்கவில்லையா? பஞ்சசீலத்துக்கு வக்கீலாக விளங்கும், இந்த அற்புதத் தூதருக்கு இது ஒரு சின்னஞ்சிறு பிரச்னைதானே. பண்டித நேரு, இலங்கை வாழ் இந்தியருக்கு அளித்த பதிலைப் பார்க்கிற பொழுது, வடக்கிலுள்ளவர்களுக்கும், வடவர்கள் ஆதிக்கத்திலிருக்கும் யூனியன் சர்க்காருக்கும், தென்னிந்தியாவையும் அதனுடைய சிரமங்களையும் பற்றி கொஞ்சங்கூடக் கவலையில்லை என்கிற கருத்து வலியுறவே செய்யும். ஒரு நல்ல காரியத்துக்கு யாத்திரை போனதாகவே வைத்துக் கொள்வோம். ஏன், நமது பிரதம மந்திரி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நீண்ட நாட்களாக நிடித்துவரும் இச் சிக்கலைத் தீர்க்கக்கூடாது. அதிலும், அவரை இப்போது வெகுவாகப் பாராட்டுகிறதே, இலங்கை! அதிகார முறையிலும், உத்தியோகத் தோரணையிலும் பேசுவதைவிட இப்போது ஏற்பட்டுள்ள அந்தரங்க, நெருங்கிய தொடர்பு பலன்தரக்கூடுமே!! நிச்சயம் பலன் தந்திருக்கக் கூடும்! நீண்ட நேரம் விவாதித்து பரிசீலனை செய்வதை அதிகாரிகளிடம்விட்டுவிடலாம் "என்னங்க பண்டா! எப்படியாவது, இந்தப் பிரச்னைக்கு ஒரு வழிகோலுங்கள். இங்கே அவர்கள் இருக்கஆசைப் பட்டால் அதற்கான உரிமைகளைக் கொடுப்பதுதானே, எங்குமுள்ள வழக்கம். இல்லையா?" என்று சொன்னால்கூடப் போதும் அவ்வளவு சிரமம்கூட எடுத்துக் கொள்ளவில்லை நேரு!

பண்டாரநாயகாவுடன் பவனி—விருந்து—புத்தர் விழா — தனது பெயரால் ஒரு ரோடு — பரவசம், அதோடு திரும்பியிருக்கிருர், என்பது உண்மையில், இது ஒரு வேதனையானசம்பவம், என்போம்.

பாண்டுங்மாநாடு முன்பு, இந்தோனேஷியாவில் கூட்டப்பட்டது சுகர்ணேவால்! தனக்கும் ஆளும் கட்சிக்கும் செல்வாக்கு தேடவே, இப்படி வெளிநாட்டுப்பிரதமர்களை அழைத்து இந்தோனேஷிய சர்க்கார் மாநாடு நடத்துகிறது என்று சொல்லப்பட்டது--அப்படி முயன்றும் இப்போது நாளொரு மேனியும் பொழுதொரு ஆட்டமுமே ஆடுகிறது, இந்தோனேஷியா!

அதேபோல இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகாவும், தனக்கு உள்நாட்டில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சி விபத்துகளைத் தவிர்ப்பதற்காக, நேருவின் முகவிலாசத்தைப் பயன்படுத்த முயற்சிக்கிருர் என்று தமிழ் வட்டாரங்கள் பல நாட்களாகவே பேசியும் எழுதியும் வருகின்றன. அது உண்மையானல், நேருவின் விஜயம், தற்போதைய சூழ்நிலையில், பண்டாரநாயகாவுக்கு ஒரு வெற்றி என்றே சொல்லவேண்டும். ஆனல்பதைக்கும் தமிழர்களுக்கோ, வேதனையும், கண்ணீரும்தான் இலாபம்!!

★


ஆந்திரரும், கேரளரும், கன்னடரும்
திராவிடக் கூட்டாட்சியின் காரணத்தை அறிய
திராவிட முன்னேற்றக் கழகத்தின்
உயிரோட்டம் உலகு அறிய

# HOMELAND

( ஆங்கில வார இதழ் )

ஆசிரியர்:

## சி. என். அண்ணுதுரை

## 2—6—57 முதல் ஞாயிறு தோறும் வார ஏடாக வெளிவருகிறது

**டபுள் கிரவுன் 1/4 அளவில்**
**8 பக்கங்கள் கிளேஸ் காகிதம்**

**தனி இதழ் 2-அணு ஆண்டுச் சந்தா ரூ 7.**

விவரங்கட்கு:

நிர்வாகி, 'ஹோம்லண்ட்'
95, திருக்கச்சிநம்பித் தெரு, காஞ்சிபுரம்.

# தியாக வேல்!

— பழநி —

"எடு, உன் வாளை!"

"அண்ணா........"

"யோசிக்காதே, எடு உன் வாளை!!"

"வேறு ஏதாவது உத்தரவிடுங்கள் அண்ணா........ ஒரு நிமிடத்தில் செய்து முடிக்கிறேன்........ இதுமட்டும், வேண்டாம்........"

"நான் கட்டளையிடுகிறேன்— உன் அண்ணனாகிய நான் கட்டளையிடுகிறேன்........ எடு, வாளை!"

"ஐயோ, அண்ணா!"

"........தம்பி! எதிரிகள் என்னைத் தேடிக்கொண்டு வருகின்றனர். இன்னும் சற்று நேரத்துக்குள் என்னையும் உன்னையும் பிடித்துவிடுவர். எடு வாளை!"

"எதிர்த்துப் போரிடச்சொல். எத்தனை பேர் வந்தாலும் சரி, அவர்களையெல்லாம் வீழ்த்தி விட்டு, வீரமரணம் அடைகிறேன்........"

"தம்பி! இனி வீரத்துக்கு வேலையில்லை. தாயகம், சாய்ந்துவிட்டது. தகாதவர்களின் வசம் போய்விட்டது. இனி, வேண்டுவது, விவேகம்! விவேகம்!!"

"........அதற்காக உடன் பிறந்த உன்னை நான் கொல்வதா? இதற்கோ நான் ஏந்தினேன் வாள்! இதற்காகவோ, இத்தனை நாளும் என் அண்ணனுடன், காடு மேடு, வனாந்திரமெல்லாம் சுற்றினேன்!!"

"சகோதர பாசமும், அளவிலா அன்பும் உன் கண்களைத் திரையிட்டு மறைக்கிறது. அதோ! அவர்கள் வரும் ஓசை கேட்கிறது.... உற்றுக் கேள்.... எப்படியும் இங்கு வந்துவிடுவார்கள்........ நாம் ஒளிந்திருக்கும் இந்தக்கோயிலுள்ளே புகுந்துதேடாமல் போகமாட்டார்கள். பிறகு, உன் அண்ணன் அவர்கள் வசம் சிக்கிவிடுவான். பிறகு, என்னை, — அவர்களை எதிர்த்துப் போராடிய என்னைத் கைதியாக்குவார்களோ, கண்டதுண்டமாக்குவார்களோ, தெரியாது........"

"அதெல்லாம் ஒரு போதும் நடவாது அண்ணா! கடவுள் நம்மைக் கைவிட்டுவிடமாட்டார்........"

"பைத்யக்காரா! உனக்கு விரோதிகளின் சாமர்த்தியம் தெரியாது. அவர்களை எதிர்த்த என்னுடைய உயிர் அவர்களிடம்சிக்கினால், அதைக் காட்டியே, ஏனைய வீரர்களை வளைத்துவிடுவார்கள்........"

**அரங்கண்ணல்**

"அதெப்படி முடியும் என்று பார்க்கிறேன்!"

"அதுவரையில் உயிரோடு உன்னை அவர்கள் விட்டுவைத்தால் தானே........"

"உன் தம்பி கோழையல்ல, அண்ணா!"

"அது தெரியும் எனக்கும். ஆனால், இதைவிட வேறு வழியில்லை. என்னுடைய உடலில், என் விரோதியின் வாளோ, துப்பாக்கியோ படுவதைவிட, என் நாட்டு வீரன் ஒருவன் கைபட்டு மடிவதையே நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். வாழ்வின் கடைசிக் கட்டத்தில், நிற்கும் எனக்கு நீ இதை வழங்கப்போகிருயா, இல்லையா?"

*

தாம்பி, என்ன பதில் சொல்ல முடியும்? கூடப்பிறந்த அண்ணனைக் கொல்வதா! திகைத்தான்— தேம்பினான்.

தம்பியின் நிலையைக் கண்டான், அண்ணன்.

தன் ஆசை நிறைவேறாது — அதற்குள் விரோதிகள் வந்துவிடுவார்கள்—என் செய்வது?

இடையிலே சொருகியிருந்த கட்டாரியை உருவினான்! மார்பிலே குத்திக்கொண்டான்!!

சற்றும் எதிர்பாராத தம்பி, 'ஐயோ, அண்ணா? என்ன காரியம் செய்துவிட்டாய் நீ!', என்று கதறினான்.

வீரக் குரலும், வெற்றி நடையும் கொண்டவனாய் விளங்கிய அண்ணன் கோயில் தரையிலே, விழுந்து கிடந்தான்! ஒரே குருதி வெள்ளம்!!

தம்பி, துடித்தான் — துவண்டான் — கதறினான் — புரண்டழுதான்.

அண்ணனின் கண் திறந்தது —உயிர், இன்னும் போகவில்லை—

அதனால், கதறும் தம்பியைக் கைகாட்டி அழைத்தான்.

"என்ன அண்ணா?"

"இன்னும் என் உயிர் போகவில்லையடா, தம்பி! இந்த நிலையில் நான் அவர்களிடம் சிக்கிக்கொண்டால்......"

தம்பிக்கு ஒன்றும் புரியவில்லை! கண்கள், குளமாயின!!

"நான் வீரமரணம் அடைவதில் விருப்பமில்லை. அவ்வளவுதானே, உனக்கு...,"

அண்ணன் குரலில் கோபம் தொனித்தது. இத்தனைக் காட்சிகளையும் ஆடாது அசையாது பார்த்துக்கொண்டிருந்த கோயில் தெய்வத்தைப் பார்த்தான் தம்பி! கும்பிட்டான்! வாளை உருவினான்! ஒரு போடு போட்டான்—ஒரு வீர உருவின், கடைசி மூச்சு போய்விட்டது. ஒரு விளக்கு அணைந்துவிட்டது.

* * *

சரிந்துபோன ரோம் பேரரசின் சரித ஏட்டிலே, இதுபோன்ற வீர மரணங்கள் ஏராளம். மாற்றானின் கையிலே சிக்கி, மண்டியிட்டோ, கூண்டிலடைத்தோ அவன் கொண்டுசெல்வதைக் காட்டினும், தன்னுடையவர்களின் கையாலேயே மரணம் அடைவதே பெரிது எனக் கருதினராம்! நெஞ்சை உலுக்கும் மேலே கூறப்பட்ட சம்பவம், வீரர் கோட்டமாம் ரோமாபுரியிலே நிகழ்ந்ததுஅல்ல; கேரளத்தின் தலைநகராம் திருவனந்தபுரத்துக்கு அருகே இருக்கிற மன்னடி கிராமத்திலே, அங்கிருக்கும் பகவதி கோயிலுள்ளே 1809ம் ஆண்டு ஜனவரி மாதம நிகழ்ந்ததாகும்.

மாற்றான் கையால் மடியக் கூடாதென்று அண்ணன் கட்டாரியை உருவி, மார்பிலே பாய்ச்சிக் கொண்டான்! அப்படியும் உயிர்போகவில்லை, தம்பிக்கு இட்டான் கட்டளை, 'வெட்டு என்னை,' என்று!!

அந்த அண்ணன் உயிர், அவனது விரோதிகளிடம் சிக்கியிருந்தால், அதைக் கண்டதுண்டமாக்கிக் கடலில் எரிவதைப் பார்க்கினும், காட்சிப் பொருளாக வைத்து, "காணுங்கள், மக்காள்! எவரெம்மை எதிர்த்தாலும், இந்தக் கதிதான் நேரும் என்பதை உணருங்கள். எம்முடைய ஆதிக்கத்துக்கு வேட்டு வைக்க யாராவது கிளம்பினால், அவர்கள் கதி, இதுதான்" என்று எடுத்துக்காட்டி, ஏனையோரை மிரட்டுவர். ஏனெனில், இந்த விரோதிகள் வேறுயாருமல்ல, ஆங்கிலேயர்கள்! ஆங்காங்கும் நாடு பிடித்து அதைத் தம் வசம் அவர்கள் ஆக்கிக்கொண்டிருந்த சமயம் அது!! அதற்கும் இடம் கொடுக்காமல், செத்துக்காட்டிய அந்தத் தீராதி தீரன் பெயர் வேலுத் தம்பி என்பதாகும். அவன் தம்பியின் பெயர் பத்மநாபன் தம்பி.

"தமியேன், செய்ததெல்லாம் பிழை! ஏதோ, காலக் கோளாறு. ஜகம் புகழும் உமக்குத் தண்டனிட மறுத்து இப்படியெல்லாம் அலைந்தேன். என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல், நான் சரியாக நடந்துகொள்ளுகிறேன்."

இப்படி ஒரு உறுதி மொழிகூட அல்ல, புன்சிரிப்போடு ஆங்கிலேயரைப் பார்த்து அவன் உதடுகளை அசைத்திருந்தால்கூடப் போதும், அவனை அவர்கள் உப்பரிகையிலே வைத்துக் கொண்டாடியிருப்பார்கள்! ஏனெனில், அவன ஒரு ஏனோதானோ அல்ல —திருவாங்கூர் சிற்றரசுக்கே திவானாக இருந்தவன்! அவன் எந்த வித ராஜ்ய காரியங்களிலும் தலையிடாமல் திவான் பதவியை விட்டு விட்டு கள்ளிக்கோட்டையில் போய் வாழ்வதானால் மாதம் ரூ. 500 'பென்ஷன்' தருகிறோம் என்று ஆங்கிலேயரே, சொல்லினர்—வாக்குறுதியையும் அளித்தனர். அவன் அதைப் பெரிதென எண்ணவில்லை! பணத்தையும் பவிசையும்விட, தன்னாட்டில் ஆதிக்கம் தேடும் அந்நியரை ஒழிப்பதே அவனுடைய இலட்சியமாகயிருந்தது!

துரத்தி வரும் ஆங்கிலேயரிடமிருந்துதப்பி அவன் ஓடியபோது திருவனந்தபுரத்துக்கு 25-மைல் வடமேற்கிலுள்ள கிளிமானூர் எனும் கிராமத்தில் அமைந்திருந்த அரசமாளிகையில் கொஞ்ச நேரம் தங்கியிருந்தானாம். அதன் அடையாளமாக, இன்னும் அங்கே, தங்கமுலாம் பூசப்பட்ட அவனுடைய வாள் இருக்கிறதாம்! திராவிடத்தின் தெனகோடியிலே அமைந்திருக்கிற திருவாங்கூரில், 1857-ல் அல்ல—1809-நடைபெற்ற அரியதொரு சம்பவம், இந்திய சரிதத்திலே இடம் பெறவில்லை! எதுதான் இடம் பெற்றிருக்கிறது? இல்லையே! எனினும் வேலுத்தம்பியின் திருநாமம், அங்குள்ளோர், மறக்காத ஒன்றாகும்.

இந்திய உபகண்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆங்கிலேயர் தம் ஆதிக்கத்தை எதிர்த்து, ஆங்காங்கும் எதிர்ப்புகள் பல கிளம்பின. எனினும் 1808-ல் திருவாங்கூரிலே முகிழ்த்த, இந்தச் சுதந்திர தாகம் சாமான்யமானதல்ல. அதற்கு தலைமை தாங்கிய வீரன் வேலுத்தம்பியும், அவ்வளவு எளிதில் மறக்கப்பட வேண்டியவனல்ல — திருவாங்கூர் கிளர்ச்சி என்று ஏதோ ஓரிரு சரித ஆசிரியர்கள் அதனை வெகு சாதாரணமாக மதிப்பிட்டுவிட்டனர்! ஆனால் அந்தக் கிளர்ச்சி அன்று வெற்றி பெற்றிருந்தால் —ஒரு பரந்த பூபாகத்தின் ஒரு பகுதியே, மாறிப்போயிருக்கக் கூடும்!

* * *

கல்கத்தாவைத் தலைநகராகக் கொண்டு, சென்னையை ஒரு பிரிவின் தலைநகரமாக ஆக்கி, திருச்சியில் ஒரு படையையும், திருநெல்வேலியிலே இன்னொரு சேனையையுமாக, ஆங்கிலேயர் ஆங்காங்கு தமக்குப் பாதுகாப்பும், அரணும் அமைத்துக் கொண்டு இருந்த காலம் அது.

## தோற்றால் கவர்னர்! சுட்டால் பெரிய மந்திரி!!

பார்லிமெண்டுத் தேர்தலில் தோற்றுப்போன வி. வி. கிரி, விரைவில் கவர்னராக்கப்படலாம் என்று தெரிகிறது. பம்பாயில் மராட்டியரின் அறப்போரின்போது நூறுக்கு மேல் சுட்டு குவித்த மொரார்ஜி தேசாய் இப்போது டில்லி பெரிய மந்திரியாகியிருக்கிறார். பார்லிமெண்டில்பேசிய எஸ். ஏ. டாங்கே அவரைப் பார்த்து "சுட்டுக் குவிப்பதால் எமது ஜனநாயகக் கோரிக்கையை அலட்சியம் செய்துவிட முடியாது. சுட்டவர்கள் பெரிய மந்திரியாக்கப்பட்டுவிடலாம், ஆனால் மராட்டிய மக்களின் கோரிக்கைகளை எப்போதுமே மறுக்க முடியாது" என்றார்.

அப்போது திருவாங்கூரை ஆண்டவர் **பலராமவர்மா** எனும் 'மகாராஜா' வாகும். திறமைக் குறைவும், சக்தியற்ற நிலையும் கொண்ட இவருக்கு மந்திரியாகயிருந்தவர் **ஜயந்தன் நம்பூதிரி** எனும் பார்ப்பனர். மன்னர், எடுப்பார் கைப்பிள்ளையாய், அரண்மனையிலிருப்போர்சொன்னதற்கெல்லாம் 'ஆமாம்' போட்டுக்கொண்டு இருந்ததால், நம்பூதிரிவைத்ததே சட்டமாகயிருந்தது! இதனால் நாடுமுழுதும் அதிருப்தியும், திகைப்பும் பரவிக்கிடந்தன. அந்தச்சமயத்தில் மக்கள் மத்தியிலேயிருந்து தோன்றிய வீரன்தான், வேலுத்தம்பி!!

1800-ம் ஆண்டு ஒரு நாள் காலை அரண்மனைக்கு முன்னால் வேலுத்தம்பி வந்து நின்றான். தன்னந்தனியாக அல்ல! அதிருப்திக்கு ஆளான மக்கள் படையுடன்! அரசன், என்ன வேண்டும் என்று கேட்டான்.

"வெறொன்றுமில்லை. அரசே, எமக்கு நல்லாட்சி வேண்டும்! அதற்கு முதல் காரியமாக நம்பூதிரியை விலக்க வேண்டும்—அவன் செய்த அட்டகாசங்களுக்கு, அவனுக்கும் அவன் சகாக்களுக்கும் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் இதுதான் எமதுவிருப்பம்.

மன்னன் பார்த்தான்! மக்களிடம் பரவியுள்ள அதிருப்தியும் ஆத்திரமும் புரிந்தது அவனுக்கு! அதனால், அவர்கள் கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படிந்ததோடு மட்டுமின்றி, தம்பியை அழைத்து; தான் என்னென்ன செய்ய வேண்டும் என்பதற்கு யோசனைகளையும் கேட்டான்.

அதன் விளைவாக நம்பூதிரிக்குப் பதில் தம்பியின் யோசனையின் பேரில் **செண்பகராமன்பிள்ளை** என்பார் திவானாக்கப்பட்டார். வேலுத்தம்பி, வியாபார மந்திரியாக நியமிக்கப்பட்டான். 1802-செண்பகராமன் இறந்ததும், தம்பி திவானானான். அது முதல் கிட்டத்தட்ட ஆட்சி புரிந்தவன் வேலுத்தம்பி என்றே சொல்லலாம். 1805-வரை எவ்வித சலனமுமின்றி, நடந்தது ஆட்சி. அந்த ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியார், திருவாங்கூர் மன்னரை பழைய நேச உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு வற்புறுத்தினர். இந்தப் புது உடன்படிக்கையில் தமது பிரதிநிதியாக ராஜ்யத்திலிருக்கும் 'ரெசிடெண்டு'க்கு சில அதிகாரங்களை அதிகமாக்கியிருந்தனர். அதோடு, ஆங்கிலேயருக்கு ஆண்டுதோறும் கட்ட வேண்டிய கப்பத் தொகைக்கும் கஷ்டம் ஏற்பட்டது திருவாங்கூரில். நாட்டின் வருமானங்கள் சரிவர நிர்வகிக்கப்படாத காரணத்தால், 'கஜானா' வில் போதிய நிதி இல்லை. ஆனால் 'ரெசிடெண்ட்' இதை ஏற்காமல், திவானை நிர்ப்பந்தப் படுத்தலானான்.

திவானாயிருந்த தம்பிக்கோ, "ஊராரொருவன் தோட்டத்திலே ஒருவன் போட்டது வெள்ளரிக்காய்! இதைக் காசுக்கு இரண்டு விற்கச் சொல்லி காகிதம் போட ......'' வெள்ளைக்காரன் யார்?— என்கிற கேள்வி கிளம்பிற்று. அதனால், அசிரத்தையாகவே இருந்தான் அதைக்கண்டரெசிடெண்டு (மெக்காலே) திவானை விலக்க வேண்டும்என்றான். தம்பியின் திறமையை அறிந்தகம்பெனியார், ஆண்டுக்கு 500-பென்ஷன் தருவதாகவும், கள்ளிக் கோட்டையில்போய் ஓய்வு எடுத்துக்கொள்ளும்படியும் கூறினர்.

மன்னரும் சரி, திவானும் சரி, இதை ஏற்கத் தயாராகயில்லை! மன்னர், உடனே 'சென்னை'க்கும் 'கல்கத்தா'வுக்கும் ரெசிடெண்டை மாற்றும்படி எழுதினார். இவர்கள் விருப்பப்படியா, நடப்பர் ஆங்கிலேயர். அதனால், வேறு வழியில்லாததால், தம்பி நேரடியாகவே ஆங்கிலேயரை எதிர்ப்பதென்கிற முடிவுக்கு வந்தான்.

இந்தச் சமயத்தில் **கொச்சியில்** திவானாயிருந்த **பாலியத் அச்சன்** என்பவரும் வெள்ளையர் போக்கில் அதிருப்திகொண்டிருந்தார். அவர், தம்பிக்கு கடிதம் எழுதி, கொச்சியிலுள்ள இல்லத்தில் ரெசிடெண்டைத் தீர்த்துக்கட்டப் போவதாக செய்தி அனுப்பினார். தம்பியும் இதற்குச் சம்மதித்தான்.

*

ஒரு நாள் காலை! ஏடும் எழுதுகோலும் எடுத்து, தம்பி, ரெசிடெண்டுக்கு எழுதினான்.

"நீர், என்னை 'பென்ஷன்' வாங்கிக்கொண்டு கள்ளிக் கோட்டைக்குப் போகுமாறு வற்புறுத்துகிறீர். அதற்கு நான், சம்மதிக்கிறேன். நான் அங்கு போய்ப் பத்திரமாகச் சேருவதற்குத் துணையாகத் துருப்புகளில் சிலரை அனுப்பி வைக்கவேண்டும்"

இக்கடிதத்தின் நோக்கம் கொச்சியிலுள்ள, துருப்புகளின் பலத்தைக் குறைக்கவேண்டும் என்பதுதான்! துருப்புகளும், போக்குவரத்துக்காகப் பணமும், அனுப்பப்பட்டு, டிசம்பர் 29-ந்தேதி (1808) அவன் புறப்படுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. ரெசிடெண்ட், இவ்வளவு பணிவாகத் திவான் இணங்கிவிட்டாரே!' என்கிற ஆனந்தத்தில் இருந்தான்.

29-ந்தேதி, காலை மலர்ந்தது. கர்னல் டாலே என்பான் **ஆலப்புழை**யிலிருந்த திவானின் அலுவலகத்துக்கு குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தான். தம்பி, அங்கேயிருந்தான். ஆனால் கர்னலைப் பார்த்து, தான் புறப்படப்போவதில்லையென்று தெரிவித்ததோடு ரெசிடெண்டைக் கொலைசெய்யும்படி தான் உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவித்தான், நெஞ்சுரத்துடன்.

பாலியாத் அச்சனுடன் முன்கூட்டியே செய்யப்பட்ட ஏற்பாட்டின்படி டிசம்பர் 28-ந்தேதியே 600-ஆயுதந்தாங்கிய வீரர்களை, ரெசிடெண்டைக் கொல்லுவதற்காகக் கொச்சிக்கு அனுப்பியிருந்தான், தம்பி. அன்றிரவு, மணி இரண்டடித்ததும், கொச்சி முதன் மந்திரியின் உதவியுடன் ரெசிடெண்ட் மாளிகையை இக்கோஷ்டி தாக்கியது! தூக்கத்திலேயிருந்த மெக்காலே, எழுந்து சன்னல் வழியாகப் பார்த்தான்; படையினர் அவனை நோக்கிச் சுட்டனர். குண்டு பாயவில்லை. படையினர், மாளிகைக்குள் நுழைந்தபோது, அவன் இல்லை! ஒரு குமாஸ்தாவின் உதவியால் கொச்சித் துறைமுகத்திலிருந்த கப்பல் ஒன்றுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டான்!

இந்தச் செய்தி வேலுத்தம்பிக்கு எட்டியதும், 'என்ன வரும்' என்பதை யூகித்து அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யலானான். திருவாங்கூர் முழுதும்,

**"தாய்நாட்டைக் காக்கக் கிளம்புவீர்!**
**நமது நாடு பரங்கியர்வசமாவதா?**
**நமது பழக்கவழக்கங்கள் அழிவதா?**

**பிரிட்டிஷாரின் படை நமது மகாராஜாவைத் தாக்குவதா?''** என்று முரசுகள் கொட்டப்பட்டன. அதைக் கேட்ட மக்களும், ஆத்திரப்பட்டு திரண்டனர்.

இந்த முழக்கம் ஏற்பட்டது தான்தாமதம், **கொல்லத்தில்** இருந்த திருவாங்கூர்ப் படைகள், வெள்ளையருடன் மோதின. அந்த முதற் போரில், தம்பிக்குத் தோல்வியே கிடைத்தது. எனினும் மனஞ் சளைக்காது, முப்பதாயிரம் வீரர்களுடனும், 18-பீரங்கிகளுடனும், ஜனவரி 15-ந்தேதி வெள்ளையரைத் தாக்கினன். கர்னல் **சால்மர்ஸ்** என்பானே மீண்டும், இவர்களைத் தோற்கடித்தான். இந்தப் படையெடுப்பு நடந்துகொண்டிருந்த போது, தம்பி, ஒரு வலிவான படையை **கொச்சிக்கு** அனுப்பினன். அங்கும் தோல்வியே துரத்திற்று!

எங்கும், ஒரே ஆத்திரமயம்! ஆங்கிலேயர் என்ருல் எரிச்சல்!— இப்படி ஒரு எழுச்சி ஏற்பட்டிருந்த வேளையில், மூன்று பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகளும் ஒரு பிரிட்டிஷ் மாதும் முப்பது வீரர்களும் கொச்சியிலிருந்து கொல்லத்துக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். தம்பியின் ஆட்கள் அவர்களனைவரையும் கொன்றனர்! ஆனல் அந்த மாதினை மட்டும், எவ்விதத் தீங்குமின்றி, கொச்சிக்கு அனுப்பிவைத்தனர்!

இந்தச் சம்பவம், நாடெங்குமிருந்த ஆங்கிலேயருக்குத் திகில் மூட்டிவிட்டது. மலபாரிலிருந்து ஒரு படை கொல்லத்துக்கு வந்தது! திருச்சியில் ஒருபடை அவசரமாகக் கிளம்பிற்று! திருநெல்வேலியிலிருந்த படை கிளம்பி, மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள ''ஆரம்பொலி கணவாய்'' அருகே தண்டு இறங்கிற்று! தம்பியின் படைகள், சமாளித்ததோடு, நெல்லையிலேயிருந்து வந்த படை திருவாங்கூருக்கு வராமல், கணவாயையும் பாதுகாத்தனர். தம்பியே, இங்கு தலைமை தாங்கி நடத்தினன், ஒரு இரவு! மேஜர் வால்ஷ், என்பான் திருவாங்கூர் படைகளின் பாதுகாப்பிலிருந்த தெற்கு மலைச்சரிவில், தந்திரமாக ஏறிவிட்டான். அதைக்கண்டு திகைப்புற்ற திருவாங்கூர்ப் படைகள் சிதறியோடின. தம்பியும், தலைநகரம் நோக்கி ஓடவேண்டியதாயிற்று! வீரத்தைதந்திரத்தால் துரத்தினர் வெள்ளையர்.

* * *

அரண்மனைக்குள் நுழைகிருன் தம்பி! வெற்றி வீரனாகவா? அல்ல, அல்ல! தோல்வியும், வேதனையும் துளைக்கப்பட்டவனாய்.

அவன் உள்ளம் கொதிக்கிறது! ஆனல், அறிவோ, 'இனி என்ன வரும்' என்பதைப் புரிந்து கொண்டுவிட்டது.

வெள்ளையர்கள், தமது ஆயுத பலத்துடன், வேட்டையாடுவதில் இறங்கிவிட்டனர்— அவர்களை எதிர்த்து மடிய தாயகத்து சிப்பாய்கள் தயார்! ஆனல், எதிர்த்து வீரமரணம் எய்தமுடியுமே ஒழிய, வெற்றி பெற முடியும் என்பது, இனிமேல், ஒரு பகற்கனவுதான்! இனி என்ன செய்வது?

யோசனைகளுடன் சென்ற தம்பியை, மன்னர், சந்தித்தார்:-

''வேலுத் தம்பி... விபரீதமாகிவிட்டதே, நிலைமை.''

''ஆமாம்! அதனல்தான், ஓடிவந்திருக்கிறேன் உங்களிடம்...''

''இனிமேல், நாம் என்ன செய்ய முடியும்?''

''ஒன்றும் செய்ய முடியாது!''

''ஆங்கிலேயரிடம் சரண் அடைந்துவிட முடியுமா?''

''கூடாது! சரணகதி என்கிற வார்த்தைக்கும் நமக்கும் வெகு தூரம்......''

''வேறு வழி......?''

''அரசே! நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் நானே பொறுப்பு ஏற்கிறேன். வெள்ளையர்கள் உங்களைக் கேட்டால், ''எல்லாம் வேலுத்தம்பியால் விளைந்தது,'' என்று கூறிவிடுங்கள். எப்படியும் நான் சாகப்போகிறேன்! தங்களுக்கும் என் கதி வரவேண்டாம். என்னுல் தங்கள் அரசு போனதாகவும் இருக்கவேண்டாம். எல்லா குற்றங்களையும் என்மீது சுமத்திவிடுங்கள். உங்களுக்கு நான் செய்த கடைசி ஊழியமாக இருக்கட்டும் இது.''

கண்ணீர் மல்க, விடை பெற்ருன் மன்னரிடம்! கடுகி விரைந்தான்—தப்புவதற்கு!!

அவனைத்தேடி, வெள்ளையர்தம் படைகள் மட்டுமல்ல திருவாங்கூர் அதிகாரிகளும் கிளம்பினர். தம்பியைப் பிடிப்போருக்கு ரூ. 50,000 பரிசென்றும் அறிவிக்கப்பட்டது!!

பிடிபடாமலேயே, அந்த மாவீரன், பிணமானுன்.

தம்பி அருகிருக்க, தானே மாய்த்துக்கொண்டு, செத்தான்.

* * *

அந்நியருக்கு ஆட்பட்ட நாட்டில், கிளர்ச்சிகள் முகிழ்ப்பது அடிக்கடி ஏற்படத்தான் செய்யும். வெள்ளையன் இந்த உபகண்டத்தை வீழ்த்திய போது, இதுபோல ஏற்பட்ட சம்பவங்கள் பல. முதல் சுதந்திரப் போர் என்று பெயர் சூட்டிக் கொண்டாடப்படும் **1857** சிப்பாய்க் கிளர்ச்சி போன்ற பெரிய நிகழ்ச்சிகளை மட்டுமே சரிதம் கூறுகிறது. ஆனல், இறந்த காலத்தின் மடியில், 1857க்கு முன்பே 1808 லேயே ஏற்பட்டது, திருவாங்கூர் கிளர்ச்சி. இது, பெரிய கிளர்ச்சியாக வேண்டுமானல், இல்லாமலிருந்திருக்கக்கூடும். ஆனல், அந்தரங்கசுத்தியுடன் பிரிட்டிஷாரை எதிர்த்து நடத்தப்பட்ட சம்பவம் என்பதை யாரும் மறக்க முடியாது. இந்திய உபகண்டத்தின் சுதந்திர நாட்களைக் கொண்டாடும் போது, வேலுத்தம்பி போன்றவர்களையும், மறந்துவிடக் கூடாது.

★

தேர்தல் ஆட்சேப மனுக்கள் சென்றுள்ளனவல்லவா? பெரும்பாலும், தேர்தலில்நின்ற அபேட்சகர்கள்தானே இம்மாதிரி மனுக்களைச் சமர்ப்பிக்கிருர்கள்! கல்கத்தாவில் ஒரு வர்க்காளரே, வழக்கு தொடர்ந்துள்ளார். ஊழல்களும் ஒழுங்கீனங்களும் நிரம்பியதாகத் தேர்தல் நடைபெற்றதாகச் சொல்லி அவர் வழக்குப் போட்டுள்ளார், யாரை எதிர்த்துத் தெரியுமா? வங்கமுதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய் தேர்ந்தெடுக்கப்பட்டதை ஆட்சேபித்துத்தான் இவ்வழக்கு! துணிச்சலான அந்த ஆசாமியின் பெயர் சதீஷ்சந்திர பக்வாசி என்பதாம்!!




செயற்கை சந்திரன்களை (Satellites) விட்டு வான் வெளியை வெற்றி கொள்வதில் அமெரிக்கா தீவிர ஆராய்ச்சி செய்து வருகிறது.

வான் வெளியைத்துருவி ஆராய்ச்சி செய்வது நெடுங்காலமாகவே விஞ்ஞானிகளுக்கு விருப்பமாயிருந்திருக்கிறது, சந்திரன் முதலிய கோளங்களை எட்டிப்பிடிக்க வேண்டும் என்பது அவர்களது விருப்பமாய் இருந்து வருகிறது. போதிய விஞ்ஞானத் தகவல்கள் இன்மையும், அத்தகைய தகவல்களை அறிவதற்கு ஏற்படும் அணுகமுடியாத செலவும் வழியடைத்துக் குறுக்கே நின்றிருக்கின்றன.

ஆயினும், அமெரிக்க விஞ்ஞான நிஸ்தாபனம், அமெரிக்க தேசிய விஞ்ஞானக் கழகம் இவற்றுடன் அமெரிக்க அரசாங்கம், ஒத்துழைப்பதனால், சீக்கிரம் வான் வெளியில் பிரவேசிக்கலாம் என்ற சாத்தியக் கூறுகள் தோன்றியுள்ளன.

*

பூமியின் ஆகர்ஷண சக்தி நிலவும் மண்டலத்துக்கு அப்பால் வெளியேற முதன் முதல் உருவான திட்டங்கள் எல்லாம் பெரிய குண்டுகள் போன்ற 'எரி பொருள்களை' வைத்து வரைந்தவையே; இவை நொடிக்கு சுமார் ஏழு மைல் வேகம் வீதம் நேரே மேனோக்கி எறியப்பட்டால் குறித்த திசையில் பூமிக்கு மேலே அதன் ஆகர்ஷண சக்தியைக் கடந்து சூனிய வெளியில் நுழைந்து விடும் என்று கருதப்பட்டது, இத்திட்டங்கள் வெற்றியடையவில்லை. காரணம் பரிசோதனைகளுக்கு பெருவாரியான பணம் தேவைப்படுவதுமட்டுமல்ல; அவ்வளவு கொடிய வேகத்தை உண்டாக்குவதும் கிளம்பும் அதிர்ச்சியை உயிருள்ளவை தாங்கக் கூடிய ஆற்றல் இல்லாமையும்முதலிய இத்தகைய செயல்முறைக் கஷ்டங்களே முக்கிய காரணம்.

ராக்கெட் முறை விருத்தியாகவே, வான வெளியை எட்டிப் பிடிக்கும் முறையும் புரட்சிகரமாக மாறிவிட்டது. இவ்வகையில் முக்கியமான துணை 1930ல் அமெரிக்க சர்வ கிரக சங்கம் என்ற பெயரில் ஏற்பட்ட அமெரிக்க வானச் சங்கமாகும்.

*

வான்வெளிச் செயற்கைச்சந்திரன்கள் எப்படி இயங்க முடியும் என்பதை அறிவது அதிகக் கடினமானதல்ல. ஒரு பொருள் எந்த எடையுள்ளதாயுனும் எந்த வடிவமானதாயினும் அதனை மணிக்கு சுமார் 18,000 மைல் வேகத்தில் (செங்குத்தாக அல்லாமல்) கிடை நிலையில் நேரே விட்டால், அதுஆகர்ஷண சக்தியால் பூமியில் விழக்கூடிய போக்கு வான்வெளியில் பாய்ந்து போய்விட ஏற்படக் கூடிய போக்குக்குச் சரிசமமாயிருக்கும் என்று எளிதில் கணக்குப் போட்டுக் காட்டி விடலாம். அதாவது அத்தகைய பொருள், காற்றினால் அதன் வேகம் குறைக்கப்படாமல் இருக்குமேயானால், பூமியைச் சுற்றி, சுழன்றுகொண்டேயிருக்கும். 350 மைல் உயரத்துக்குமேலே காற்றின் எதிர்ப்பு கவனிக்கத்தக்க அளவில் இராது என்று தெரிந்ததே.

ஆகவே ஒரு செயற்கைச் சந்திரனை 350 மைலுக்கு மேற்பட்ட ஒரு வட்டத்தில் சுற்றி வரும்படி மணிக்கு சுமார் 18,000 மைல் வேகத்தில் எறிந்தோமானால், என்றும் அது பூமியைச் சுற்றிக் கொண்டேயிருக்கும்; சுமார் 1—1/2மணி நேரத்துக்கு ஒரு முறை அடிவானத்துக்குமேல் தோன்றிக் கொண்டேயிருக்கும், செயற்கைச் சந்திரனுக்குத் தேவையான வேகத்தை—அதாவது நொடிக்கு சுமார் 5 மைல் வேகத்தை—'ஜெட் உந்து முறை'யில் உற்பத்தி செய்து, விரும்பிய வட்டத்தில் பூமியைச்சுற்றி வரும்படி அதனை எறிவதுதான் இப்போது பிரச்னை. முதல் முதல் அனுப்பப்படும் செயற்கைச் சந்திரன்கள் தாமே குறிப்பெடுக்கும் தெர்மா மீட்டர்கள், வாயுபாரமானிகள் எலக்ட்ரோ மீட்டர்கள் போன்றவற்றையே எடுத்துச் செல்லும். பின்னர் சுண்டெலி, முயல், தவளை போன்ற உயிர்ப்பிராணிகள் அனுப்பப்படும்போது, அவற்றின் நாடித் துடிப்பு, மூச்சு, இரத்த அழுத்தம் ஆகியவற்றைப் பார்த்துப் பதிவு செய்யத்தக்க கருவிகளும் செயற்கைச் சந்திரனில் இருக்கும். அவை பதிவு செய்தவற்றை தானாகவேஒலிபரப்பித் தெரிவிக்க அதற்றினுள் ரேடியோ டிரான்ஸ்மீட்டரும் இருக்கும்.

செயற்கைச் சந்திரன்களையும் கருவிகளையும் உருவாக்குவதற்கென்றே துண்டாக அமெரிக்கக் கஜானா, உரிய நிபுணர்களிடம் ஒரு பெருந் தொகையை ஒப்படைத்திருக்கிறது. கட்டுமான வேலைக்குப் பொதுப்படப் பொறுப்பேற்றிருக்கிறது அமெரிக்கக் கடற்படையின் ஆராய்ச்சிப் பரிசோதனைக் கூடம், இத்தகவல் சென்ற ஆண்டு ஜெனீவாவில் நடந்த நாட்டுத் தலைவர்கள் நால்வர் மகாநாட்டுக்குப் பிறகு பொது மக்கள் அறிய வெளியிடப்பட்டது. செயற்கை நிலவுகளை உருவாக்குவதில் சோவியத் ரஷ்யா இத்தாலி, ஜப்பான் முதலிய பல நாடுகளும் தனித்தனியே முயன்றுகொண்டிருக்கின்றன என்ற உண்மையும் அப்போதே வெளியாயிற்று.

*

வான்வெளிப் பயணத்தில் அமெரிக்கா அடையும் முன்னேற்றங்களில் இந்தியாவுக்குள்ள அக்கரை இரண்டு விஷயங்களால் அதிகப்பட்டுள்ளது. முதல் விஷயம் கருத்துப் பரிவர்த்தனைக்கு உதவியாக ஆங்கிலம் பொதுவாக இருப்பது. இரண்டாவது விஷயம், குறிப்பிடத்தக்க மற்ற நாடுகளைப்போல் அமெரிக்கா விஞ்ஞான அறிவைப் பரப்புவதில் எதையும் அவ்வளவு மூடு மந்திரமாக வைப்பதில்லை என்பது. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் சர்வ கிரக சங்கங்கள் இருப்பதுபோல், இந்தியாவிலும் ஒன்றைத் தோற்றுவிக்கும் யோசனை இருக்கிறது; எனினும் இது இன்னும் முன்னேறவில்லை.

# வெள்ளி தகரமான கதை

ஆறே ஆறணு! அதற்காக வழக்கு தொடரப்பட்டது!

"ஆறணுவாக இருந்தால் என்ன? 600 ரூபாயாகயிருந்தால் என்ன! இலஞ்சம், இலஞ்சம் தானே" என்று கோர்ட்டில் எடுத்துக் கூறப்பட்டது.

குற்றம் நிரூபிக்கப்படவே அந்த அதிகாரி, வேலையிலிருந்து நீக்கப் பட்டார்.

*

எவ்வளவு உஷாராக சர்க்கார் வேலை செய்கிறது என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா? ஆறே ஆறணுதான் வாங்கினர் ஒரு அதிகாரி! டில்லி செகரட்டேரியட்டில் நடந்தது இது!! அவர் மீது வழக்குப் போட்டு, குற்றத்துக்கான தண்டனையும் வழங்கியிருக்கிறோம்— என்று, குதூகலமாக வெளியிட்டிருக்கிருர், நிதியமைச்சர், கிருஷ்ணமாச்சாரியார். ஊழலையும் இலஞ்சத்தையும் ஒழிப்பதில் காங்கிரஸ் அரசு எவ்வளவு சுறுசுறுப்புடனிருக்கிறதுஎன்பதற்கு இதை விட வேறு எடுத்துக்காட்டு வேண்டுமோ?

ஆறே ஆறு அணு! இரண்டு 'கப்' காபிக்காக வாங்கினரோ, ஒரு 'பாக்கெட்' சிகிரெட்டுக்காகப் பெற்ருரோ, தெரியவில்லை. ஆனல், அந்த அதிகாரி நிச்சயம் இதுபோன்ற 'சில்லரை' விஷயங்களுக்காகத்தான், ஆறணு மீது ஆசைப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அந்த ஆறணுவைக் கொண்டு அரை 'காரட்டில்' வைரம் வாங்க முடியாது. அழகான மாளிகையும் எழுப்பிவிட முடியாது. எனினும் இலஞ்சம், இலஞ்சம்தானே! அதனுல், வேலையிலிருந்தே விரட்டப் பட்டிருக்கிருர்!

அவர் ஒரு பெரிய அதிகாரி அல்ல, சாதாரண அதிகாரி. அப்பேற்பட்டவர் ஆறணு லஞ்சம் வாங்கவேண்டியநிலையிலிருக்கிருர் என்ருல் அது யாருடைய குற்றம்? சமூகத்தில், அந்த ஆறணுகூட அவருக்கு மிகப் பெரிதாகக் கருதப்படுகிறதென்ருல், அந்த அதிகாரி மட்டும் தானு குற்றவாளி? நாட்டில், இது போல நானுவித செய்திகளை அடிக்கடி கேள்விப்படுகிறோம்.

நாலு அணுவுக்கும் எட்டணுவுக்கும் 'சார்ஜ்' செய்கிருர்கள், போலீஸ்காரர்கள்.

'நந்தி' கையில் ஒரு ரூபாயை வைத்து அழுத்தினுல், அதிகாரியின் தரிசனம் தானே கிடைக்கும்.

'என்னய்யா, கண்டிராக்டர்! எலுமிச்சம்பழம் நூறு வேணும் என்றேனே. என்ன ஆச்சு?' என்கிருர் ஒரு மேஸ்திரி.

இதுபோல, குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டு, ஒருபக்கம் குடும்பத்தின் வறுமை, தேள் போலக் கொட்ட, கொடுமைக்கும் தேவைக்குமிடையிலே ஆட்படும் அதிகாரிகள், 'கிம்பளம்' தேட வேண்டிய அவசியத்துக்கு ஆளாகிருர்கள்.

அந்த அவசியத்துக்கு அவர்கள் ஆளாகும் நிலைமை இருக்கிறதே, அதை அகற்றித்தர வேண்டிய பொறுப்பு, சர்க்காருடையதாகும். சமூகத்தில், 'சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற ஊதியம்' என்கிற ஒரு நிலைமை இருந்தால் இலஞ்சமும் ஊழலும் ஏன் ஏற்படப்போகிறது?

இரஷ்யாவில் இப்படியொரு நிலைமை கொடுங்கோலன் ஜார் காலத்தில் இருந்தது! இப்போது, இல்லையே!

வாழ்க்கையை நடத்துவதற்கு அவசியமான சகல தேவைகளையும் எளிதாகப் பெறலாம் என்கிற நிலைமையிருந்தால் ஒருவன் ஏன் ஊழல்களில் ஈடுபடப்போகிருன். வீட்டிற்குப் போனல் மனைவி, உப்பில்லை என்று சொல்லுவாளே— குழந்தை 'பிஸ்கட்' கேட்குமே— பெரிய பெண்ணுக்குத் திருமணத்தை இந்த ஆண்டாவது முடிக்கவேண்டுமே! பணத்துக்கு எங்கே போவது? — என்கிற தொல்லைகள் அலைமோதும்போது அவன் கண்கள் அங்குமிங்கும் பார்க்கின்றன! அகப்பட்டதை வாங்க 'கை' ஏந்துகிருன்!

சமூக அமைப்பு, இக்குறைகள் நீங்கும் வகையில் திருத்தியமைக்கப்பட வேண்டும். "அப்படியொரு காலம் வருகிற வரையில் நாங்கள் இலஞ்சம்வாங்கிக்கொண்டேயிருப்போம்!," என்று அதிகாரிகள் கூறலாம், அதுவே சரி என்பதல்ல, இதன் கருத்து.

தேள் கொட்டுகிறது! அதிகாரிகளை மட்டுமல்ல, சமூகத்திலுள்ள சகலரையும்தான் கொட்டுகிறது!! ஆதலால், அந்த சமூகக் குறையைப் போக்குவதில் அதிகாரிகள் தமது ஒத்துழைப்பை நல்கவேண்டுமே தவிர, பொதுமக்களைப் பாதிக்கும் கெட்ட வழிகளில் ஈடுபடுவதென்பதை யாரும் ஒப்பார்.

"...ஆனல், உயர்ந்த உத்தியோக நிலையிலிருப்பவர்கள் ஒய்யாரமாகயிருக்கிருர்கள். அவர்கள் மீது, சந்தேகம் ஏற்படுவது கிடையாது. இலஞ்சம், கீழ்நிலையில் மட்டுமல்ல, வாய்ப்பும் வசதியும் பெற்று வாழும் பெரிய அதிகாரிகளிடமும் இருக்கிறது. "ஒரு 'கூட்ஸ் கிளார்க்'கும், ஸ்டேஷன் மாஸ்டரும் சம்பாதிக்கும் பணம், இரயில்வே போர்டு மெம்பரைக் கூடப் பொருமை கொள்ளச் செய்யும்," என்று சர்க்காரின் இலஞ்சஊழல் கமிட்டி தெரிவிக்கிறது. இவர்கள் மட்டுமல்ல, இவர்களைவிடப் பெரியவர்களும் இலஞ்சம் வாங்காமலில்லை!,"

இவ்வண்ணம், கடந்த கிழமை டில்லிப் பார்லிமெண்டில், கிருபளானி பேசியிருக்கிருர். இதனை

யாரும், மறுக்கமுடியாது. இலஞ்சம்! இலஞ்ச ஒழிப்பு! — என்று சொல்லி, வாய்ப்பும் செல்வாக்கும் அற்ற அதிகாரிகளைத் தண்டிக்க முடிகிறதே ஒழிய, 'ஓநாய்'கள் மட்டும் தப்பிவிடுகின்றன. காரணம், அந்தப் பெரிய அதிகாரியைக் கொண்டே 'சர்க்காரை' நடத்த வேண்டியுள்ளது காங்கிரஸ் மந்திரிகளுக்கு!!

கிருபளானி, இந்தக் குற்றச்சாட்டுக்கு, ஆதாரங்களும் அளித்துப் பேசியிருக்கிறார்.

**இலஞ்ச ஊழலை ஒழிப்பதாகச் சொல்லி, இங்கே அகப்படும் யாரையாவது ஒருத்தரை 'டிஸ்மிஸ்' செய்கிறீர்களே, சர்க்கார் பணத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கார் வாங்கி, அதன்மூலம் கொள்ளை லாபம் அடித்தாரே ஒரு வெளிநாட்டுத் தூதுவர், அவரை என்ன செய்தீர்கள்?**

கேட்கிறார், கிருபளானி! ஆண்டுக்கு ஒரு புது கார் — அதுவும் சர்க்கார் பணத்தில்! வாங்கிய காரைக் குறைந்த விலைக்கு வேண்டியவருக்குக் கொடுப்பார்— உடனே, புது கார் வாங்குவார். இப்படி ஒரு வெளிநாட்டுத் தூதுவர், 'தர்பார்' செய்ததாக சர்க்காரின் கணக்குக் குழுவினரே, கண்டுபிடித்தனர். ஆறணா வாங்கியவரை, விரட்டிவிட்டோம் உத்தியோகத்திலிருந்து என்று கூறும் கிருஷ்ணர், என்னசெய்தார் இந்த வெளிநாட்டுத் தூதுவரை? சுகமாக, சுந்தரமாக, இருக்கிறார் அவர்! ஏனெனில், நேருவுக்கு வேண்டியவர்!!

இன்னொரு வெளிநாட்டுத் தூதுவர்; அவர், அங்கேயிருந்தபோது, விருந்தினர்களை உபசரிப்பதற்கென்று வெள்ளிச் சாமான்கள் வாங்கினார், சர்க்கார் பணத்தில். அவரை இன்னோரிடத்துக்கு மாற்றிவிட்டார்கள். அவருக்குப் பிறகு, வேறொருவர் தூதுவர் பொறுப்பேற்றார். மாளிகையிலுள்ள சகல பொருள்களோடு, இந்த "வெள்ளிசெட்"டும் இருப்பதாகக் கணக்கு தரப்பட்டது. கொஞ்ச நாள் போனதும் வெள்ளி என்று கூறப்பட்ட, 'அந்த செட்' கொஞ்சங் கொஞ்சமாக கறுத்துக்கொண்டே வரவே, சந்தேகப்பட்டு அதைச் சோதனையிட்டனர். அப்போது, "அது வெள்ளியல்ல: தகரத்தால், செய்யப்பட்டது" என்று தெரியவந்தது. முன்பு இருந்த தூதுவரின் மனைவி, வெள்ளி செட்டை எடுத்துக்கொண்டு, இப்படியொரு 'போலி'யை வைத்துவிட்டுப் போனார் என்று வெளியாயிற்று.

எப்படி, கதை? கிருபளானி கூறிய இதனை எவரும் மறுக்கவில்லை! நேருகூட எவ்வித மறுப்பும் தரவில்லை! ஒரு வெளிநாட்டுத் தூதுவர், அழகான மாளிகை ஆயிரக் கணக்கில் சம்பளம், எடுபிடிகள் வகையறா, இப்படி 'ராஜபோகத்துடன்' வாழ்கிறவரே இப்படி சில்லரைத்தனம் செய்திருக்கிறார். ஆறணாவுக்காக 'உத்தியோகத்தை'யே இழந்தார், ஒரு சிறு அதிகாரி! ஆனால், ஒரு வெளிநாட்டுத் தூதுவர், மிகவும் 'கேவலமான ஆசை'க்கு இரையாகி, வெள்ளியைத் தகரமாக்கியவர் இன்னும் விருதுகளோடு பவனி வந்துகொண்டுதான் உள்ளார்!

ஆகவே, முதலைகள் தப்பிவிடுகின்றன—மூலபலத்தாலும், 'அவருக்கு வேண்டியவர், இவருக்கு வேண்டியவர்' என்கிற சிபார்சுகளாலும். ஆனால், அகப்பட்டுக்கொண்டு 'ஐயோ! வேலையும் போச்சே!' என்று கண்ணீரோடு தலையில் கைவைத்துக்கொண்டு வீதிக்கு வருகிறவன் ஏழையின் கூட்டத்தில்தானிருக்கிறான். தகரம், வெள்ளியாகிறது! வெள்ளியாகவேண்டியது தகரமாகித் தவிக்கிறது! — இந்த நிலை மாற, வெறும் கண்துடைப்பு போதாது, காரியம் ஆற்றும் உள்ளத் துணிவும், வேண்டியவர் வேண்டாதவர் என்று பார்க்கும் பெருந்தன்மையும் வேண்டும். அதுதான், இல்லையே! இருந்தால் நேருவுக்கு நெருங்கியவர்களே இன்னும் வெளிநாட்டுத் தூதர்களாகத் தொடர்ந்து இருப்பார்களா!! ★

## 'சர்ட்டிபிகேட்!'

ஐந்தாண்டுத் திட்டத்துக்கு என்று அதிகவரி போட்டுள்ளதே, டில்லி சர்க்கார், அத் திட்டம் எப்படி நிறைவேற்றப்படுகிறது என்பதற்கு, இதோ ஒரு சர்ட்டிபிகேட்.

ஐந்தாண்டுத் திட்டத்தை எப்படி, டில்லி அமுலாக்குகிறது என்பது குறித்து, பம்பாயில் மே 3-ந்தேதியன்று, இத்தகவலை அவர் வெளியிட்டிருக்கிறார்.

"வருவதை முன் கூட்டியே யோசித்து திட்டங்களை வகுக்கவேண்டும். இப்படிச் செய்தால்தான், வீணாகவிரயம் ஆவதைத் தடுக்கலாம். இப்போது உருக்குத் தொழிலுக்கு ஆக்கம் தரவேண்டும் என்று சர்க்கார் கருதுகிறது. இந்த ஆசையைத் திட்டக் கமிஷனிடம் தெரிவித்து, அதன்படி சிலவழிமுறைகளை வகுத்திருக்கலாம். ஏனெனில், இப்போது நாம் இறக்குமதி செய்திருக்கும் பலரகப்பட்ட கனரக இயந்திரங்களை இங்கேயே செய்திருக்கலாம். அதனால், எவ்வளவோ மிச்சமாயிருக்கும். ஆனால், இயந்திரங்கள் பலவற்றை இறக்குமதி செய்த பிறகே, இந்த ஆசை வருகிறது, சர்க்காருக்கு"

முன்யோசனையில்லாததால், நமது பணம் விரயமாகிறது என்று வெளியிடும் இவர் யார் தெரியுமா? திட்டக் கமிஷனுக்கு ஆலோசகராக (அட்வைசர்)யிருக்கும் பி. சி. மகாலனோபில் எனும் பேராசிரியர்!!

ஆலோசகர், இதனை அமைச்சர்கள் குழுவில் கூறாமல், மக்கள் முன் கூறக் காரணமென்ன? கூறியிருப்பார்! ஒருவேளை, மறுக்கப்பட்டிருக்கும் போலும்! மனம் புழுங்கி, திட்டக் கமிஷன் துணைத் தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் உணவுப் பொருள் விஷயத்தில் 'சர்ட்டிபிகேட்' தந்தது போல, தருகிறார்!!

# ராஜகுமாரியின் கண்ணீர்!

சந்தேகமில்லை!—என்று தெரிவித்திருக்கிறார், நேரு பண்டிதர்.

ஏழை மக்களுக்கு, புதிய வரிகள் சுமையாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை! — என்று, நெய்வேலியில் பேசுகையில், குறிப்பிட்டிருக்கிறார்.

வரி விதித்த கிருஷ்ணமாச்சாரியார்கூட, மறுக்கவில்லை — அவரும், ஒப்புக்கொள்ளுகிறார், "புதிய வரிகள் பொதுமக்களைப் பாதிக்கத்தான் செய்யும்" என்பதாக.

காங்கிரசுத் தலைவர்கள், ஆட்சியை நடத்துவோர், அனைவரும் ஒருமுகமாக இதே கருத்தை வெளியிடுகின்றனர்.

> "ஆனல், ஏன் இந்த வரிகளைப்போட்டோம்தெரியுமா? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பணம் தேவைப்படுகிறது! அதற்காக ஒரு 78-கோடியைச் சரிக்கட்டலாம் என்று இந்த வரிகளைப் போட்டோம். எதிர்காலச் சுபீட்சத்தை எண்ணி, மக்கள் இதைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்."

என்கிறார்கள்! எதிர்கால சுபீட்சத்தை யெண்ணி, இந்த வரிகளைத் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டுமாம்!!

தாங்கிக்கொள்ளுவதைப்பற்றிக் கவலையில்லை; ஆனல் தாங்கும் சக்தி இருக்கிறதா மக்களுக்கு? வறுமையால், உடைந்த உடலோடு இருக்கும் அவனிடம் ஏது, சக்தி!

> "இந்தப் பணத்தைச் சேகரிக்க இப்படி வரி போடுவது தவிர வேறு மார்க்கமில்லையா?"

இருக்கிறது, என்கிறார், ராஜகுமாரி! நாடிழந்த ராஜகுமாரிகளுள் ஒருவரல்ல, சமீபகாலம் வரை டில்லி மந்திரிகளுள் ஒருவராக இருந்தாரே, ராஜகுமாரி அமிருத கவுரி, அவர் தெரிவிக்கிறார், இவ்விதம்! எப்படியெப்படி, இந்தப் பணத்தைச் சம்பாதிக்கலாம் என்பதற்கான யோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்!!

1. விமானக் கட்டணத்தை உயர்த்தலாம்
2. உப்பு வரி விதிக்கலாம்
3. சிறு சுகாதாரக் கட்டணம் விதிக்கலாம்

இவைகள், ஏழை மக்களை அவ்வளவாகப் பாதிக்காது என்றும் ஏழைகளின் தேவைகளாகிய தீப்பெட்டி — தேயிலை — காபிக்கு வரிவிதிப்பது, இரயில் கட்டணத்தைஉயர்த்துவது ஆகியவைகளுக்குப் பதில் இப்படிச் செய்யலாமே, என்றும் கேட்கிறார். இந்த யோசனை மட்டுமல்ல. இன்னென்றும்கூறுகிறார், ராஜகுமாரி.

> "மதுவிலக்குப் பரீட்சை நடந்த துருக்கி, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய எல்லா நாடுகளிலும் தோற்றுவிட்டது. இந்தியாவில் நடப்பதென்ன? மதுவிலக்கு வெற்றி பெற்றுள்ளதா என்பதை மத்திய சர்க்காரும் சரி, ராஜ்ய சர்க்கார்களும் சரி, நெஞ்சில் கைவைத்துச் சொல்லட்டும். சர்க்காருக்குச் சேர வேண்டிய பணம் கள்ளச் சாராயக்காரர்களுக்குப் போகிறது. இதுதான் கண்டபலன்."

ராஜகுமாரி அமிருதகவுரி, காங்கிரஸ் கட்சிக்குள் திடீர் பிரவேசம் செய்த 'ராஜா, சர்' அல்ல! காந்தியடிகளின் நாட்களில், அவரோடு நெருங்கிப் பழகிய ஒரு தேசபக்தை!! அகிம்சா நெறியிலும், மதுவிலக்கிலும் தீவிர சிரத்தைக் கொண்டவர்தான். எனினும், கூறுகிறார். ஏன்? மதுவிலக்கைச் சரிவர அமுல் நடத்தவில்லை! நல்ல நோக்கோடு செய்யப்பட்ட அந்தக் காரியம், இன்று கேடுற்றுவிட்டது!! அதுமட்டுமல்ல, அவர் வெளியிடும், இன்னொரு கருத்தையும், கூர்ந்து கவனிக்கவேண்டும், நாம்.

## மதுவிலக்கை யார் ஆதரிக்கிறார்களாம் தெரியுமாகள்ளச்சாராயக்காரர்கள்தானும்!

ராஜகுமாரி கூறுகிறார்-அந்தளவுக்கு மதுவிலக்கால், கள்ளச் சாராயக்காரர்களுக்கு 'யோகம்' அடிக்கிறது-மதுவிலக்கு, சட்டத்தில் உள்ளதே ஒழிய, நடைமுறையில் இல்லை. அந்த வேதனையில், "அதுவே, இருந்துதொலைந்திருக்கலாம்," போலிருக்கிறதே என்கிறார். நம்மைப் பொறுத்த வரையில் 'மது' அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்போம். ஆனல், இப்போது காங்கிரஸ் ஆட்சியால் மதுவிலக்கு அமுல் நடத்தப்படும் விதம், கள்ளச்சாராயம் காய்ச்சும் 'குடிசைத்தொழிலை' அபிவிருத்தி செய்வதாகவே உள்ளது! "இதற்கு, வரிகளையும் இழந்து, வேதனைப்படுவது எதற்கு? மக்கள் மீது பளுக்களை ஒன்றின்பின் ஒன்ருக ஏன்,ஏற்றவேண்டும்-காந்திஜி இன்று உயிருடனிருந்து, இன்று நிர்வாகத்திலுள்ள ஊழல்களையும், அதிகக் குடிப்பழக்கம் ஏற்பட்டிருப்பதையும் கண்டால் இவ்விதமே சொல்லியிருப்பார்." என்கிருர் ராஜகுமாரி!!

இந்த யோசனைகளைவிட அவர் கூறியுள்ள வேறொன்றே நமது கவனத்தை மிகவும் கவர்ந்தது.

# ஆடம்பரத்தால் அழிகிறது பலகோடி!

அவர், கிட்டத்தட்ட ஏழெட்டாண்டுகளாய் டில்லி மந்திரியாகயிருந்தவர்! இப்போதும், அவர் டில்லி மேல்சபை உறுப்பினராயிருக்கிருர்—அங்கு பேசியபோது தான் இந்தக் கருத்துக்களையும் வெளியிட்டிருக்கிருர்!!

ராஜகுமாரி அமிருதகவுரி, ஏழைகளின் மீது இப்படி வரிகளை விதிக்கும் அரசு, எப்படி பணத்தைக் காப்பாற்றலாம் என்பதற்கு அரியதொரு யோசனையைச் சொல்லியுள்ளார்.

**சர்க்கார், தம் வீண் விரயச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளலாம்.**

கூறுவது, ஒரு டில்லி 'மாஜி' மந்திரி! சர்க்கார், வீணை விரயச் செலவுகளைச் செய்கிறதாம்!!

**ஒரு மகாநாடு நடப்பதாக வைத்துக் கொண்டால், ஒவ்வொரு அமைச்சரும் படைகளைப்போல் திரட்டிச் செல்கின்றனராம்! யாரை? குமஸ்தாக்கள், பணியாட்கள் முதலியோரை படைகளைப் போல் திரட்டிச் செல்கின்றனராம்!**

ஏன் அப்படிச் செய்கின்றனர், தெரியுமா? தமது ஆடம்பரம் தெரிய! அந்தஸ்து விளங்க!! இந்தச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளலாம், என்று கூறுகிருர்.

*

**பதினைந்தாம்** நூற்றுண்டிலிருந்த, குதிரைகள் பூட்டிய 'கோச்' வண்டியில், பீரங்கிகள் முழங்க, படைகள் பலவும் அணிவகுத்து நிற்க, பவனி வந்தார் இந்தியக் குடியரசுத் தலைவர் ராசேந்திரப் பிரசாத்! ஏடுகளில் வந்த புகைப் படக் காட்சிகளைக் கண்டபோது, நாம்ஒரு ஏழை நாட்டிலிருக்கிறேம் என்கிற எண்ணமே ஏற்படவில்லை! அந்தளவுக்கு ஆடம்பரமும், கம்பீரமும், உண்டாக்கப் பட்டது அந்தப் பவனிக்கு. இதற்கு மட்டும் என்ன செலவாயிற்று என்று கணக்கெடுத்துப் பார்த்தால், கண்கள் கலங்கும்.

இந்த ஒரு பவனி மட்டுமல்ல, சாதாரணமாகவே, குடியரசுத் தலைவரும் சரி கோலோச்சுவதற்கு அவசியம் என்பதாகத் கூறப்படும் கவர்னர்களும் சரி, வெளியே கிளம்புவதென்ருல் செய்யப்படும் ஆடம்பரங்கள் 'பிரிட்டிஷார்' காலத்தையே மிஞ்சிவிடும். இங்கே இருக்கிற கவர்னர் ஜான், சட்டசபையை ஆரம்பித்துவைக்க கோடை வாசஸ்தலத்திலிருந்து வந்து, பத்து நிமிடம் பேசிவிட்டு உடனே திரும்பிஞர் — அமைச்சராகயிருக்கும் வெங்கட்டராமன் 'பதவிப்பிரமாணம்' செய்ய இங்கிருந்து உதகமண்டலம் சென்ருர். செல்வதிலும், வருவதிலும் ஏற்படும் செலவு கொஞ்சமாகக்கூட இருக்கலாம்! ஆனல் அந்தப் பணம், **மக்கள் தரும் வரி** என்பதை மறக்கக்கூடாது ஆள்வோர்! சட்டசபை ஆரம்பமாவதற்கு பத்து நாட்கள் முன்னதாக உதகை சென்ற கவர்னர் இருந்து ஆரம்பித்து வைத்தபின் போவதால் எந்தத் தீங்கும் வந்துவிடப் போவதில்லை—இந்த ஜானும், மக்கள் மன்றத்திலே ஒருவர்தான். எனினும் "கவர்னர்" என்கிற பூணரம் பூண்டுகொண்டிருப்பதற்காக அளவிலா ஆடம்பரமும் அநாவசியச் செலவும் செய்யப்படுகின்றன. இப்படி விரயமாகும் பணத்தை எண்ணிடும்போது ஏக்கமும் துக்கமும் பிறக்கிறது நமக்கு.

**"ஒரு சுதந்திர நாட்டில், சில பதவிகளுக்கு நாமே ஒரு முக்கியத்துவத்தை உண்டுபண்ண வேண்டியவர்களாயிருக்கிறேம். அதனல், சில சம்பிரதாயங்களை அனுசரிக்கவேண்டியது அவசியம்தான்."**

நேரு அவர்கள், இந்த வீணுடம்பரத்தைப் பலர் சுட்டிக் காட்டிய போது, சொல்லிய பதில் இது. சில சம்பிரதாயங்களை அனுசரிக்க வேண்டியது அவசியம்தானும்!!—அனுசரிக்கட்டும், அமைச்சரோ, கவர்னரோ, குடியரசுத் தலைவரோ காங்கிரசின் 'கருணை'க்குப் பாத்திரமானவர்கள் என்பதால், காளை மாட்டு வண்டியில்தான் பவனிவர வேண்டும் என்று கூறவில்லை! ஆனல், அந்தஸ்து என்கிற பெயரால் பிரிட்டிஷார் அனுசரித்த சம்பிரதாயங்கள் ஏன் வேண்டும் இங்கு? அழகான காரில் வரக்கூடாதா பிரசாத்! பதினைந்தாம் நூற்றுண்டு ராஜகம்பீர 'கோச்' எதற்கு? அதைப் பாதுகாப்பதற்கு என்று ஒரு பிரிவு எதற்கு? அதற்காக ஏன் வீண் செலவு!

செலவுக்கும், **வீண் செலவுக்கும்** வித்தியாசம் அதிகம் உண்டு.

டில்லி சர்க்கார் வீணை செலவுகளைச் செய்கிறது, என்கிருர்! அவர், டில்லி அமைச்சராக சில நாட்களுக்கு முன் வரையில் இருந்தவர்!

**இப்படி, வீணன வகைகளில், பணத்தை விரயம் செய்வதால், ஏழை இன்னும் ஏழையாகும்படியான வரிகளைப் போட நேருகிறது.**

கேட்கிருர், ராஜகுமாரி! ஏழை' மேலும் ஏழையாகிருன்—இத்வா நல்லது? என்று கேடகிருர்!!

> "ஏழைகளுக்கு மட்டும் தானு, வரியைப் போட்டிருக்கிறேம். **பணக்காரர்களுக்கும் வரி போடவில்லையோ?"**

என்று கேட்கப்படக்கூடும் காங்கிரஸ் வட்டாரங்களால்! பாலும் பழமும் உண்டு பஞ்சணையில் துயிலுவோருக்கு, எவ்வளவு வேண்டுமானலும் வரிபோடலாம்—அதனல் அவர்கள் வாழ்க்கை ஒன்றும் அஸ்தமித்துப் போய் விடப் போவதில்லை. ஆனல், "அவர்களுக்குப் போட்டதுபோல, ஏழைகளுக்கும் போடுகிறேம்" என்ருல் ஏழை எங்கே போவான் பணத்துக்கு! மக்கிப்போய்க் கிடக்கும் அவனது குடிசையின் கீற்றுக்கள், தூள் தூளாகச் சிதறி விழவே, இது வழிசெய்யும்!!

இதற்குப்பதில், சர்க்கார் தமது வீண் செலவுகளை குறைத்துக்

# அதை நிறுத்தினல் என்ன கேடு?

# "ஐந்தாண்டை" நீட்டினால் என்ன!

கொண்டால் போதுமே, என்கிறார்.

78-கோடி ரூபாய்! ஆனால், இதைக் கொடுக்க ஒவ்வொரு குடிமகனும் கொடுக்கவேண்டியிருக்கிறதே, அந்த வரிகள், அவனை மென்மேலும் எலும்புக் கூடாக்கும், சந்தேகமேயில்லை!

**இதே சமயத்தில், தமது கீர்த்தி கித்தாப்புக்காக ஆண்டுதோறும் 250கோடி ரூபாய்களை இராணுவத்துக்கு என்று செலவழித்து வருகிறது, டில்லி.**

ராஜகுமாரியார் கூறும், வீணான ஆடம்பரச் செலவுகளில் ஒன்றுதான் இதுவும்! இந்த எட்டு ஆண்டுகளில் சுமார் 1500 கோடி ரூபாய்களை விழுங்கியிருக்கிறது இராணுவம்!!

மே 17-ந்தேதி நேருவே புது டில்லியில் தெரிவித்திருக்கிறார், "நாம் 5-வருடத் திட்டத்துக்கு எவ்வளவு செலவுபிடிக்கும் என்று எதிர்பார்க்கிறோமோ, அந்தத் தொகையை ஒரு பெரிய நாடு 80 தினங்களில் ஆயுதத் தளவாட உற்பத்திக்காகச் செலவழிக்கிறது..." என்று.

நம்முடைய ஒரு ஐந்தாண்டுத் திட்டச் செலவு, அவர்களுக்கு 80 நாட்களில் செலவழிகிறது! அதாவது 6000-கோடி ரூபாய். 80-நாட்களில்!

இப்படிச் செலவுசெய்யும் அமெரிக்காவின் பரிபூர்ண உதவியும், பாகிஸ்தானுக்கு உள்ளது. பாகிஸ்தான் செய்துகொண்டுள்ள ஆயுத ஒப்பந்தப்படி, அதற்கு வேண்டிய ஆயுதங்கள் யாவும் இனிமாகவே கிடைக்கும்!

இங்கிலையில், எவ்வளவு பணம் பாதுகாப்புக்காகச் செலவழித்தும் என்ன பிரயோசனம்? இதுவும், அமெரிக்காவையோ அல்லது ரஷ்யாவையோ நாடுவதைத் தவிர வேறு வழி தென்படவில்லை! எனினும் ஆண்டு ஒன்றுக்கு, அழிகிறது 250-கோடி ரூபாய்!

ஏனிந்த வீண் செலவு, என்று கேட்கிறோம், நாம்.

ராஜகுமாரியும், இந்திய சர்க்கார் தாங்கள் செய்யும் வீண் செலவுகளைக் குறைத்துக்கொள்ளலாம் என்கிறார்.

வீண் செலவுகளோ, குறையவில்லை! ஆனால், ஏழையின் சுமையோ அதிகரிக்கிறது!

"இவர்கள் கூறும் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்தபின், இவர்கள் சொல்லுவதுபோல ஆறு ஓடலாம்—அருவி கொட்டலாம்! ஆலை சுழலலாம்—உற்பத்திப் பெருகலாம்—ஆனால், இவைகளை அனுபவிக்க வேண்டிய மக்கள் இருக்கமாட்டார்கள்; எலும்புக் கூடுகளே இருக்கும்" என்று ஒரு பார்லிமெண்டு உறுப்பினர் குறிப்பிட்டிருப்பது நடந்தாலும் அதிசயப்படுவதற்கில்லை. அவ்வளவு சுமை ஏறுகிறது! ஏறிக்கொண்டேயிருக்கிறது, ஒவ்வொரு நாளும்!

> "இப்படி ஏழை மக்கள்மீது சுமையை ஏற்றாமல், திட்டத்தை நிறைவேற்ற முடியாதா? அதிகப் பணம் தேவைப்படுகிறதென்றால் இப்படி வரிகளைப்போட்டு ஏன் வாட்டவேண்டும்? நன்மை தரும் திட்டத்தை ஐந்தே ஆண்டுகளில்தான் செய்துமுடிக்கவேண்டும் என்று என்ன அவசியம் இருக்கிறது? ஆறு ஆண்டு அல்லது ஏழாண்டு என்று நீட்டிக்கொண்டால், என்ன? குடியாமுழுகிவிடும்!"

என்று நேருவின் மருமகனார் கேட்டிருக்கிறார்? எங்கே, காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில். நிச்சயம் இப்படிச் செய்யலாம்—ஐந்து ஆண்டில் ரூபாய் 6000 கோடி தேவையென்றால் ஆண்டுக்கு நாம் 1200 கோடி சம்பாதித்தாகவேண்டும்—ஆறுஆண்டுகளில் என்றால் ஆண்டு ஒன்றுக்கு 1000-கோடி சம்பாதித்தால் போதும் — 200-கோடி குறையும்.

இப்படி திட்ட காலத்தை நீட்டிக்கொள்வதால், பிரளயம் எதுவும் ஏற்பட்டுவிடாது; ஏழை வயிறார, இல்லாவிடினும், பசியை அடக்கிவாழும் காட்சியைக் காணும் பாக்கியம் பெறலாம். ஆனால், பிடிவாதமாக இருக்கின்றனர்! வீணான ஆடம்பரத்துக்கும், 'ரஷ்யா 5-ஆண்டு திட்டம்போட்டு வெற்றி கண்டதுபோல, நாங்களும் போட்டு சாதித்தோம்' என்று வெளிநாடுகளுக்குக் காட்டிக்கொள்வதற்காக, நம்மை வதைக்கின்றனர் — வாட்டுகின்றனர்!!

★

இந்த கிழமை பசிபிக்மா கடலில், பிரிட்டன் நீர்வளிக் குண்டைவெடித்துப் பார்த்திருக்கிறது. கூடாது! ஆகாது!—என உலக முழுமையுமிருந்து மட்டுமின்றி இங்கிலாந்துக்குள்ளேயே எதிர்ப்பு இருந்தும், அதைப் பொருட்படுத்தவில்லை, ஆளும் மாக்மில்லன் சர்க்கார். இதனால், அந்த வட்டாரத்தில் நீரிலும் காற்றிலும் கெட்ட அணுக்கள் பரவி, மக்களுக்கு மாபாதகம் விளையும் என்று கருதப்படுகிறது. தீங்கு பயக்கும் இந்த நடவடிக்கையை, எதிர்ப்பு இருந்தும் செய்தார் என்பதற்காக மே 17-ந் தேதி ஒரு மாது, இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக்மில்லனின் வீட்டுக் கதவின் மீது ஒரு 'வொயின்' புட்டியை வீசி எறிந்து 'கண்டனம்' தெரிவித்திருக்கிறார். போலீசார் கைது செய்த அவருக்கு 12-மாத நன்னடத்தை ஜாமீனும் 2-பவுன் அபராதமும் விதித்திருக்கிறார், நீதிபதி. "என்னை நீங்கள் தண்டிக்கலாம், ஆனால் 10-லட்சம் பவுண்டு எடையுள்ள குண்டை சர்க்கார் மட்டும் எறியலாமா? எத்தனை முறை தண்டித்தாலும் தொடர்ந்து என் கண்டனத்தை இதுபோன்ற முறைகளில் செய்துகொண்டிருப்பேன்" என்றாராம் அம்மாது. 45-வயதுள்ள அவரது பெயர் அலிசியா சாயர்.

# அழிந்தா போய்விடும் 'பாரதம்'?

# ஆக்கம்தரும் அழகு

—[A. கலைவாணன், B. A.]—

தென்றலிலே அசைந்தாடும் செந்நெல் கதிர்களும்; தீங்கனியும், செம்மலரும் திகழ்கின்ற பூங்காவும் ஒரு புறம் அழகு செய்ய, செழிப்பிற்கு வழிவகுக்கும் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இந்தத்திருவிடத்தில்குறைவில்லை. நாட்டுப் பொருளாதாரத்தை உயர்த்திடும் காட்டு வளம் செறிந்தது நமது திராவிடம். பசுமையெனும் பட்டாடை போர்த்தி இயற்கை வளர்க்கும் எழில்நாடு. எங்கனும் உயர்ந்த குன்றுகள்—ஓடிடும் அருவி—அழகு தங்கிடும் காடு, அங்கெலாம் விளைகின்ற திரண்ட தேக்கும், சிறந்த அகிலும், நறுமணச் சந்தனமும், அழகு நமக்குத் தரும் ஆக்கங்கள். முல்லை வனத்தை மொழி நலம் தோன்ற முத்துநடையிலே கற்பனை நயத்தோடு அற்புதமாய்த் தீட்டியுள்ளனர் தமிழ்ச் சொல்லோவிய வித்தகர்கள்.

அந்த ஓவியங்களிலே, புன்னை அருகே மூங்கில் விண்முட்ட ஒருபுறம், மறுபுறம் எழுந்த பலாவின் முதிர்ந்த கனிபறித்து, கடுவன் மந்தியைக் கையாலழைக்கும் இன்பக் காட்சிகள் பல தீட்டப்பட்டிருக்கும். இதோ மற்றொரு காட்சி.

இந்திய உபகண்டத்தில் காடுகளின் பரப்பளவு 2,82,840 ச்துர மைல்களாகும். இந்த உபகண்டத்தின் மொத்தப் பரப்பளவில் கால் பாகத்துக்குக்குறைவானதுஇது.சீதோஷ்ண நிலையைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு அதிககாடுகள் இங்கே இல்லை. அதற்கு மொத்தப் பரப்பளவில் மூன்றிலொரு பாகமாவது காடுகள் இருக்க வேண்டும். நம் திராவிடத்தில் சுமார் 35,000 சதுர மைல்களுக்கு காடுகள் பரவி உள்ளன. திருவிடத்தின் மொத்தப் பரப்பளவில் இது சுமார் நூற்றுக்கு 27.

இந்திய உபகண்டத்தில் ஐவகைக் காடுகளைப் பார்க்கலாம். எப்போதும் பசுமை தவழும் காடுகள் 80" முதல் 120" வரை மழை பெய்யும் இடங்களில் நிறைந்திருப்பனவாம். தக்காணத்தின் பெரும் பகுதி 60" முதல் 80" வரை பெய்யும் பருவ மழைக் காடுகள் பரவியது. வறண்ட நிலக்காடுகள் ராஜபுதனத்திலும், பஞ்சாபிலும் அதிகம்! மலைவளர் காடுகள் திராவிடத்தில் 5,000 அடி உயரத்திலும், இமயத்தில். 3,000 அடி உயரத்திலும் வளர்ந்துள்ளன. கங்கை, மகாநதி சிந்து நதிகளின் சமவெளிக் காடுகள் ஒருவகை.

95.4% அதாவது 2,69,915 சதுர மைல்கள் பரப்புள்ள காடுகள் மாநில காட்டிலாக்காவினரால் நிர்வகிக்கப்படுகின்றன. தனிப்பட்டோரால் நிர்வகிக்கப்படுவது 4.6% ஆகும். வியாபாரத்துறையில் பயன் தரும் காடுகளின் பரப்பளவு 73.1%. ஒழிந்த 68,000 (26.9%)சதுரமைல் காடுகள் பயனற்ற இலாபகரமில்லா காடுகளே ஆகும். இரு முக்கிய மாநிலங்களின் காடுகள் பரப்பு:-

| மாநிலம் | மொத்தப்பரப்பு | காடுகள்பரப்பு |
|---|---|---|
| அசாம் | **55445 (மைல்)** | **21637—39%** |
| ம. பிரதேசம். | **98573 ,,** | **47057--47.7%** |

நாட்டு வருமானத்தின்பெரும்பகுதி விவசாயத்துறையிலிருந்து வருவதாகும். இதில் காட்டு வளமும் தன் பங்கை கனிசமான அளவில் செலுத்தி வருகிறது. 1953—54ல் கிடைத்த தேச வருமான ரூபாயில் காடுகள் மட்டும் சுமார் 70 கோடி ரூபாய் அளித்திருக்கிறது.

திராவிடத்தில் மலைவளர் காடுகளும் பருவ மழைக் காடுகளுமே அதிகம். இந்தக் காடுகள் நம் திராவிடத்தில் எழில் கூடமாக மட்டுமின்றி செல்வப் பீடமாகவும் விளங்குவன. தேக்கு, கருங்காலி, சந்தன மரம், ஒதியம், மூங்கில்—இவ்வகை வலுவும் தரமும் நிறைந்த மரங்கள் வளரும் காடுகள் திராவிடத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெருந்துணை நிற்பன.

காகிதத்தொழில்
தீப்பெட்டி
பிளைவுட்

முதலியதொழில்களுக்கு மூலகாரணம் திராவிடத்தின் காடுகளே. திராவிடத்திற்குத் தேவையான எரிபொருள்கள் பெருமளவில் அதன் காடுகளிலிருந்தே கிடைக்கிறது. இங்கே உள்ள காட்டின் விளைபொருள்களின் அளவும் தரமும் உலகில் வேறு எங்கும் கிடையாது. தேக்கு போன்ற பயனுள்ள மரங்களை மட்டுமின்றி, மருந்துகள், தீப்பெட்டி, காகிதம், ரப்பர், டர்பன்டைன்—இவைகள் தயாரிப்பதற்கான மூலப்பொருள்களை காடுகள் அளிக்கின்றன. காடுகள் நிறைந்த பகுதி உச்சநிலை வெப்பத்தை சமநிலைப் படுத்தும்.

திராவிடத்தில் 2500 வகையான மரங்கள் இருக்கின்றன. இவைகளில் 450 வகை மரங்கள் மிகமிக பயனுள்ளவை, மதிப்பு வாய்ந்தவை. அன்றாட வாழ்வின் தேவைகள் பலவற்றை அவை பூர்த்தி செய்கின்றன. மரங்களிலிருந்து எண்ணை வகைகளும், ஒருவகைத் திராவகமும் நமக்குக் கிடைக்கிறது. சிறு சிறு தொழில்களுக்குப் பயன்படும் சில வகைத் தாவரங்களும், புற்களும் அழகு தரும் ஆக்கமே. தேன், கோந்து, கொம்புகள்—திராவிடத்துக் காடுகளிலே கிடக்கும் சிறப்பு.

இங்கே தாவர வகைகள் மட்டும் 3000 இருக்கின்றன. எண்ணைதரும் மரங்களான தென்னையும் சந்தனமும் இங்கே ஏராளம். கொய்னா போன்ற மருந்து தரும் மரங்களுக்கும் குறைவில்லை. பரிமளிக்கும் சோப்பும் பல்வகை மணம் பொருளும் தர மைசூரில் சந்தன மரங்கள் உண்டு. வைரம் பாய்ந்த தேக்கு மரத்தால் வலுவான கலங்கள் கட்டி, திரைகடலோடி பெரும்பகை வெட்டிப் பொருள்கூட்டி முட்டாப் புகழ் கொண்டோர் நம் முன்னோர். அந்தத் தேக்கு மரங்களுக்கா இந்தத் திருவிடத்தில் பஞ்சம்? கலம் அமைக்க, கட்டிடம் எழுப்பிட, தளிசுகள் செய்ய, தரை உலாவும் ஊர்திகள் உண்டாக்க, தேக்கு இங்கே இருக்கிறது.

ரோஸ்வுட் என எல்லோருக்கும் தெரிந்த மரங்கள் இங்கு ஏராளம். அழகிய மேஜைகள், நாற்காலிகள் ஆக்கவும், அவசியமான உழவுக் கருவிகள் செய்யவும் இவை அதிகம் பயன்படுகின்றன. பேப்பர் செய்வதற்குத் தேவையான மூங்கில் நம் திருவிடத்து மலைச்சாரல்களிலும், மருதநிலப்பகுதிகளிலும் பெருமளவில் கிடைக்கின்றன. புற்கள் பொதுவாக கால்நடைகளுக்குச் சிறந்த உணவு. ஆனால் சிலவகைப் புற்கள் காகிதம் செய்யவும், கூடைகள் முடையவும் கயிறுகள் பின்னவும் பயன்படுகின்றன.

எனவே திராவிடத்தின் காடுகளில் கிடைக்கும் ஒவ்வொரு பொருளும் பயன்தரத்தக்கதாய், பொருளீட்டித் தருவதாய் உள்ளன. இந்திய உபகண்டத்தில் 1949—50ல் மட்டுமே 438996000 கன அடி மதிப்புள்ள மரமும் எரிபொருளும் கிடைத்திருக்கின்றன. கிடைத்திருக்கும் மற்றைய சிறுசிறு பொருள்களின் மதிப்பு மட்டும் கிட்டத்தட்ட 480 லட்ச ரூபாய்களாகும். இதிலே திராவிடத்தின் பெரும் பங்கும் இணைந்திருக்கிறது. இவ்வாறு திராவிடத்தின் அழகு ஆக்கம் தரும் சிறைப்புடையதாக அமைந்துள்ளது. தனிநாடாக பிரிந்தால், தன் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து விளங்குபுகழ் கொள்ளும் சிறப்பு மிக்கது திராவிடத்தின் ஆக்கம்தரும் அழகு.

✶

# மெலிவும் தமிழும்

[எழில்வழுதி]

---

SOUTHERN NEWS COMPANY MADRAS-2

சோர்வகல்வதற்குச் சற்றுலவி வருவோம் என்று
 [illegible]
ஆர்வமிக [illegible]
 அன்றவரின் [illegible]
மார்பகட்டிச் சோர்பலினைத் தூரத் தள்ளி,
 மாத்தமிழின் காதலினால் எழுந்து நின்றேன்!
நார்வனைந்த மல்லிகையின் மொக்குப் போல
 நற்சிரிப்பை அடக்கினராய் இதழ்விரித்தார்!

ஏன்சிரித்தார் என்றெனக்குப் புரியவில்லை!
 எழில்நிறைந்த அவர்நடையை எண்ணி எண்ணி
நான்சிரித்து, வெட்கத்தால் நாணி நின்றேன்,
 நல்வாத்தின் எதிர்கோழி நடம்இடல்போல்!
தான்சிரித்த காரணத்தை ஆசான் சொன்னார்—
 "தம்பி! நீ தமிழ்போலத் தோன்றுகின்றாய்!
வான்விரித்த வையமுழு தாண்ட நம்தாய்
 வளராமல் முடங்கிவிட்ட வகையைப் பாராய்!"

ஊண்சிறக்க வழியில்லை உனக்கே! மேலும்
 உடைசிறக்க வழியில்லை! உடலைப் பேணித்
தான்வளர்க்கத் தெரியவில்லை: தவறிக் கெட்டாய்
 தற்போது நீவளர வழியும் உண்டு!
வாணாளில் அகம்புறமாம் பகுப்பைக் கண்ட
 வண்டமிழின் வழிவந்த இடைக்காலத்தோர்
வான்சிரிக்கக் கடவுளரை வளர்த்து விட்டார்!
 வளர்க்கவில்லை நம்தாயை! வதைத்தே விட்டார்!

"இந்நிலைஏன்? இழிநிலைஏன்? எல்லோன் போல
 இறைத்தொளியை வீசியநம் எழிலார் அன்னை
தன்னிலையிற் தாழ்ந்ததும்ஏன்? திருவிடத்தோர்
 தம்முழைப்பாற் பெற்றசெல்வம் தமக்கில்லாமல்
பன்னிலையிற் பாதகர்க்குச் செல்வதும்ஏன்?
 மந்திமொழி அரசாள வந்ததும்ஏன்?
உன்நிலையில் எண்ணிப்பார்! உணர்வாய் உண்மை!"
 உதிரத்தின் கொதிப்போடு உரைத்தார் ஆசான்.

முடித்துவிட்டார் ஆசான்! என் பாதத் தோர்கல்
 முட்டிவிட்டுச் சிரித்திடநான் துடிதுடித்தேன்
'அடித்துவிட்ட அடிபலமா?' என்றார் ஆசான்.
 ஆம்! தமிழர்க் கிந்தியெனும் மந்தி நல்லாள்
கொடுத்திட்ட, கொடுக்கின்ற, அடியைப் போலக்
 கொடிதொன்றும் இல்லையெனக் கூறும்! அள்ளி
முடித்திட்டாள் கூந்தலினை 'ஏழிலி' என்பாள்!
 முழுஇரவுக் கந்திப்பெண் வழிவகுத்தாள்.